மரபணு மாற்ற கத்தரிக்காய்க்கு எதிர்ப்பு: ஜனவரி 26-ல் கிராம சபைகளில் தீர்மானம்

First Published : 25 Jan 2010 12:00:00 AM IST



சென்னை, ஜன. 24: மரபணு மாற்ற கத்தரிக்காயை மத்திய, மாநில அரசுகள் தடை செய்ய வலியுறுத்தி தமிழகம் முழுவதும் ஜனவரி 26-ம் தேதி நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட முதல் உணவுப் பயிரான கத்தரிக்காய்க்கு மத்திய அரசின் மரபணு பொறியியல் ஒப்புதல் குழு அனுமதி அளித்துள்ளது. இதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இதனையடுத்து பொதுமக்களின் கருத்தை அறிந்த பின்னரே மத்திய அரசு இறுதி முடிவெடுக்கும் என்று மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிவித்தது. இதனையொட்டி இப்போது நாட்டின் பல நகரங்களில் பொதுமக்கள் கருத்துக் கேட்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை கருத்துக் கேட்பு நிகழ்ச்சிகள் நடந்த கோல்கத்தா, புவனேஸ்வரம், ஆமதாபாத் உள்பட எல்லா இடங்களிலுமே மரபணு மாற்ற கத்தரிக்காய்க்கு எதிரான கருத்துகளே அதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் கேரள மாநில அரசைத் தொடர்ந்து மேற்கு வங்கம், பிகார், ஜார்க்கண்ட், குஜராத், ஆந்திரம், கர்நாடகம் என 10}க்கும் மேற்பட்ட மாநில அரசுகள் மரபணு மாற்ற கத்தரிக்காய்க்கு தடை விதித்துள்ளன.

கிராம சபையில் தீர்மானம்: இந்நிலையில் குடியரசு தினத்தன்று (ஜன. 26) இந்தியா முழுவதும் கிராம பஞ்சாயத்துகளில் கிராம சபை கூட்டங்கள் நடைபெறுகின்றன. கிராம சபைகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு, சட்டப்பேரவை, நாடாளுமன்ற தீர்மானங்களுக்கு இணையாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்தி தமிழகம் முழுவதும் 26-ம் தேதி நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் மரபணு மாற்ற கத்தரிக்காய்க்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றி, மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் ஜெய்ராம் ரமேஷுக்கு அனுப்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

உணவு பாதுகாப்புக்கான கூட்டமைப்பு, தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழு, கோ. நம்மாழ்வார் தலைமையிலான தமிழக இயற்கை உழவர் அமைப்பு, நுகர்வோர் குழுக்களின் கூட்டமைப்பு போன்ற பல அமைப்புகள் இந்த கிராம சபை தீர்மானங்களை வலியுறுத்தி பிரசாரம் செய்து வருகின்றன.

"இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக இருக்கும் அனைத்து ஊராட்சிகளிலும் மரபணு மாற்ற கத்தரிக்காய்க்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படும்" என்று அக்கட்சியின் மாநில துணைச் செயலாளர் சி. மகேந்திரன் தெரிவித்தார்.

"மார்க்சிஸ்ட் கட்சி வலுவாக உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் நிச்சயம் தீர்மானம் நிறைவேற்றுவோம். பிற ஊராட்சிகளிலும் ஒருமித்த அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்ற பிரசாரம் செய்து வருகிறோம்" என்றார் தமிழ்நாடு விவசாயிகள் சங்க (மார்க்சிஸ்ட் சார்பு) பொதுச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன்.

"எங்கள் அமைப்பைச் சேர்ந்த பெண்கள் தலைவர்களாக உள்ள 78 பஞ்சாயத்துகளில் தீர்மானம் நிறைவேற்றுவதோடு, தமிழ்நாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகளில் தீர்மானம் நிறைவேற்ற ஏற்பாடு செய்து வருகிறோம்" என்றார் தமிழ்நாடு பெண்கள் இணைப்புக் குழுத் தலைவர் ஷீலு.

உண்ணாவிரதம்: காந்தியடிகள் நினைவு தினமான ஜனவரி 30}ம் தேதி மரபணு மாற்ற கத்தரிக்காயை அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தி இந்தியா முழுவதும் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கேரளம், ஒரிசா போன்ற மாநிலங்களில் வேளாண்மை அமைச்சர்கள் தலைமையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது.

தமிழகத்தில் சென்னை, கோவை, மதுரை, தஞ்சாவூர் உள்ளிட்ட பல நகரங்களில் உண்ணாவிரதம் நடைபெற உள்ளது. பல்வேறு தொண்டு நிறுவனங்கள் இணைந்து நடத்தும் மரபணு மாற்ற உணவுப் பொருளுக்கு எதிரான பேரணியும் சென்னையில் நடைபெற உள்ளது.

### விவசாயிகள் இயற்கை விவசாயத்தைப் பின்பற்ற ஆட்சியர் அறிவுரை

First Published : 25 Jan 2010 03:12:37 AM IST

திண்டுக்கல், ஜன.24: உடலுக்குத் தீங்கு விளைவிக்காத இயற்கை விவசாயத்தில் லாபம் அதிகம் இருப்பதால், விவ சாயிகள் இயற்கை விவசாயத்தைப் பின்பற்ற வேண்டும் என்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மா.வள்ளலார் கூறி னார்.

மாநில அளவில் முதல்முறையாக மாவட்ட நிர்வாகம் சார்பில், திண்டுக்கல்லில் நடைபெற்று வரும் வேளாண் கண் காட்சி மற்றும் கருத்தரங்கில் அவர் ஞாயிற்றுக்கிழமை பேசியதாவது:

ஒரே மாதிரியான பயிர்களை ஒரே சமயத்தில் அனைத்து விவசாயிகளும் பயிரிடுவதற்குப் பதிலாக அன்றைய தேவையின் அடிப்படையில் விளைவிக்க வேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகளில் விவசாயத் துறையினரின் ஆலோசனையின் பேரிலேயே விவசாயம் நடைபெறுகிறது.

அதிக விளைச்சல் தரும் என்ற எண்ணத்தில், நிலம் மாசுபடும் வகையில் அதிக உரங்களை கொட்டக் கூடாது. இத னால் மண் தனது ஜீவனை இழந்து காட்சிப் பொருளாக மாறி விடும்.

இயற்கை முறையில் உற்பத்தி செய்த விவசாய விளைபொருள்களை விற்பனை செய்வதற்காகவே மேலை நாடுக ளில் சூப்பர் மார்க்கெட்டுகள் உள்ளன. இயற்கை முறையிலான விளைபொருள்களுக்கு நல்ல விலையும் கிடைக்கி றது. இம் முறையினால் நிலம் கொல்லப்படுவதும் குறைகிறது.

மேலை நாடுகளில் விளைபொருள்களை நல்ல முறையில் பேக்கிங் செய்து விற்பனை செய்கின்றனர். இதனால் அப்பொருள்களுக்கு நல்ல விலையும் கிடைக்கிறது. இது போன்ற பேக்கிங் முறைகளை இங்குள்ள விவசாயிகள் ஏன் மேற்கொள்ளக் கூடாது?

விளை பொருள்களை சந்தையில் போட்டுவிடுவதுடன் கடமை முடிந்தது என விவசாயிகள் இருக்கக் கூடாது. நீர் வசதிகள் அதிகம் இல்லாமல் பாலைவனத்தைக் கொண்டுள்ள ஆஸ்திரேலியா, இஸ்ரேல் போன்ற நாடுகள் உற்பத்தி யில் தன்னிறைவு அடைந்துள்ளதுடன் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளது. இதற்கு திட்டமிட்ட முறையில் விவசாயம் செய்வதே காரணம். நமது விவசாயிகளும் திட்டமிட்டு பயிர் விளைச்சல் மேற்கொள்ளும்போது விவசாயிகளின் நிலை உயரும் என்றார் ஆட்சியர் மா.வள்ளலார்.

**பிரையண்ட் பூங்காவில் 3 லட்சம் மலர்ச் செடி நாற்று நடவுப் பணி துவக்கம்**

First Published : 25 Jan 2010 03:12:19 AM IST

கொடைக்கானல், ஜன. 24: கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் பல்வேறு விதமான மலர்கள் மற்றும் கண் ணாடி மாளிகையில் ஆண்டு முழுவதும் பூத்துக் குலுங்கும் மலர்கள் உள்ளன. இவற்றை சுற்றுலாப் பயணிகள் ஆர்வ முடன் கண்டு ரசித்து வருகின்றனர்.

இந் நிலையில், ஏப்ரல்,மே மாதம் சீசனுக்காக தற்போது பிரையண்ட் பூங்காவில் சால்வியா, டேலியா, பேன்சி, மேரி கேஸ்பேட், ஆந்திரியா, டாபர்ஜன்,ஜிஸ்வந்தியா உள்பட 50 வகையான பூக்கள் பூப்பதற்கு தற்போது நடவு செய்யப் பட்டுள்ளது.

மேலும் இந்தாண்டு பூங்காவில் அதிக அளவில் மலர்த் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதில் 3 லட்சம் மலர் செடி நாற்றுகள் நடவு செய்யும் பணி நடைபெற்று வருகின்றன.

தற்போது பகலிலும், இரவிலும் அதிகமான பனி நிலவுவதால், நாற்றுகளையும்,விதைகளையும் பனிப் பொழிவு தாக் காமல் இருக்க பிளாஸ்டிக் பைகள் மேற்கூரைகளால் அமைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

கொடைக்கானலில் கடந்த சில தினங்களாக கடுமையான பனிப் பொழிவு நிலவுகிறது. காலை 9 மணி அளவில் சூரிய வெளிச்சம் ஏற்படுகிறது.

மாலை 4 மணிக்கு பனிப் பொழிவு நிலவுகிறது.

இரவு நேரங்களில் கடுமையான பனிச் சாரல் மற்றும் சில நேரங்களில் சிறிதாக பனிக்கட்டி விழுகிறது.

இந் நிலையிலும், கடந்த இரண்டு நாட்களாக அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

பனியையும் பொருட்படுத்தாமல் ஏரியில் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர். சுற்றுலா இடங்களில் அதிகளவில் சுற்று லாப் பயணிகள் காணப்பட்டனர்.

**கோபன்ஹேகன் ஒப்பந்தத்துக்கு இந்தியா உள்ளிட்ட 4 நாடுகள் குழு ஆதரவு**

First Published : 25 Jan 2010 01:57:49 AM IST

புது தில்லி, ஜன. 24: கோபன்ஹேகன் மாநாட்டு ஒப்பந்தத்துக்கு இந்தியா உள்ளிட்ட 4 நாடுகள் குழு ஆதரவு தெரிவித்துள்ளது.

பிரேசில், தென் ஆப்பிரிக்கா, இந்தியா, சீனா ஆகியன இணைந்து "பேசிக்' என்ற குழுவை உருவாக்கியுள்ளன. இந்த நாடுகளின் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டம் புது தில்லியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அமைச்சர்கள் ஜெய்ராம் ரமேஷ் (இந்தியா), ஜி ஜென்ஹுவா (சீனா), கார்லோஸ் மின்க் (பிரேசில்), புயெல்வா சொன்ஜிகா (தென் ஆப்பிரிக்கா) ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த தாங்கள் தன்னிச்சையாக மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகள் குறித்து ஐ.நா. பருவநிலை மாற்றத்துக்கான குழுவிடம் ஜனவரி 31-க்குள் அனைத்து நாடுகளும் தெரிவிக்க வேண்டும் என கோபன்ஹேகன் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

ஆனால், இந்த காலக்கெடுவை நீட்டிக்க ஐ.நா. முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், ஜனவரி 31 காலக்கெடுவை நீட்டிக்க கூடாது என "பேசிக்' குழு வலியுறுத்தியது.

கோபன்ஹேகன் மாநாட்டு ஒப்பந்தங்கள் சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்துபவை அல்ல என்றும் மெக்சிகோ மாநாட்டில் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு அவை ஒரு தொடக்கமே என்றும் அமைச்சர்கள் குறிப்பிட்டனர்.

**மூலிகை தாவரங்கள் கண்காட்சி**

First Published : 25 Jan 2010 06:01:44 AM IST

கரூர், ஜன. 24: கரூரில் மூலிகைத் தாவரங்கள் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

வாங்கல்சாலை குருதேவர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் பசுமைப் படை மாணவ-மாணவிகள், அருட்பெருஞ்ஜோதி மூலிகை ஆராய்ச்சி நிலையம் சார்பில் கரூர் ஐயப்பா சேவா சங்கத்தில் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

கண்காட்சி தொடக்க நிகழ்ச்சிக்கு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மு. கந்தசாமி தலைமை வகித்தார்.

தொடக்கக் கல்வி அலுவலர் குமாரசாமி, ரோட்டரி சங்கங்களின் ஆளுநர் ராசேந்திரன், பொறியாளர் ந. பொன்னுசாமி, பேராசிரியர் எம். மாரியப்பன், கரூர் ஜவுளி ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் எம். நாச்சிமுத்து, பி. ராமசாமி உள்ளிட்டோர் பேசினர். பள்ளித் தாளாளர் க. குமரன் வரவேற்று பேசினார்.

கண்காட்சியில் "நமக்காக வாழும் தாவரங்கள்' என்ற தலைப்பில் இடம்பெற்றிருந்த மூலிகைத் தாவரங்களின் மருத்துவ குணங்கள் குறித்தும், அவை உடலின் எந்த பாகத்துக்கு பயனளிக்கும் என்பது குறித்தும், எந்த நோய்க்கு மருந்தாக அமைகின்றன என்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், பல், காது, தொண்டை, கல்லீரல், நுரையீரல், மலக்குடல், சிறுநீரகம், எலும்பு, இருதயம் போன்ற உடல் பாகங்களை வலுவூட்டும் பொருள்கள் குறித்த மூலிகைத் தாவரங்களின் பட்டியலும் இடம் பெற்றிருந்தன.

தலைமுடி வளர்வதற்கு, மூளை பலம் பெறுவதற்கு பயன்படும் மூலிகைத் தாவரங்கள் குறித்தும் விளக்கப்பட்டிருந்தது.

கண்காட்சியில் பங்கேற்றவர்களுக்கு "உடலை உறுதி செய்யும் மூலிகைகள்' என்ற தலைப்பிலான விளக்கக் கையேடு இலவசமாக வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து, மாலையில் நடைபெற்ற விழாவில் இயற்கை வேளாண் வல்லுநர் கோ. நம்மாழ்வார் சிறப்புரையாற்றினார். திங்கள்கிழமை கண்காட்சி நிறைவடைகிறது.

ஏராளமான பள்ளிக் குழந்தைகள், பொதுமக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர்

### மேட்டூர் அணை நீர்மட்டம் 79.32 அடி

First Published : 25 Jan 2010 12:56:51 AM IST

சேலம், ஜன. 24: மேட்டூர் அணை நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 79.32 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,300 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 8,001 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. நீர் இருப்பு 41.28 டி.எம்.சி.

### களர் நிலத்தை சீர்திருத்துவது எப்படி?

First Published : 25 Jan 2010 12:55:52 AM IST

சங்ககிரி,ஜன.24: களர் நிலங்களில் மண் இறுகி, காற்றோட்ட வசதியில்லாமல் இருப்பதால் பயிர்களின் வேர் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. உழவு செய்ய கடினமாக இருக்கிறது. ஊட்டச்சத்துகள் பயிருக்கு கிடைக்காத நிலை ஏற்படுகிறது.

இதுகுறித்து விவசாயிகள் களர் நிலத்தை சீர்திருத்தும் வழிமுறைகள் குறித்து சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் ப.செளந்தரராஜன் தெரிவித்துள்ளது:

நிலத்தை 20-30 சென்ட் பாத்திகளாகப் பிரிக்க வேண்டும். இப்பகுதிகளைச் சுற்றி ஒரு அடி உயரத்திற்கு வரப்புக் கட்ட வேண்டும். நிலத்தில் 100-200 அடி இடைவெளியில் ஒன்றரை அடி அலகமும், 2 அடி ஆழத்திற்கும் வடிகால்கள் வெட்ட வேண்டும். இப்பகுதிக்கு மேலுள்ள பகுதியிலிருந்து உப்புகள் வடியாமலிருக்க குறு வடிகால் அமைக்க வேண்டும். வடிகால்களை ஒன்றோடொன்று இணைத்து, முடிவாக கழிவு நீர் எல்லாம் ஒரு முகமாக வெளியேறும்படி அமைக்க வேண்டும்.

மண் பரிசோதனை பரிந்துரை செய்யப்பட்ட அளவு ஜிப்சத்தை பாத்திகளில் சீராகப் பரப்பி நீர் பாய்ச்சி உழவு செய்ய வேண்டும். நீரை 4 அங்குலத்திலிருந்து 8 அங்குலம் உயரத்திற்கு தேக்க வேண்டும். இந் நீர் தானாக கசிந்து வடிகாலில் வடிய வேண்டும். வாய்க்காலில் வெட்டி விடக் கூடாது. நீர் குறையக் குறைய 4-6 அங்குலம் உயரத்திற்கு 2 அல்லது 3 நாட்கள் வரை தொடர்ந்து நீரைத் தேக்கிக் கொண்டிருக்க வேண்டும். வடிகாலில் கசிந்து வரும் நீர் சோடியம் கரைந்த உப்பு நீராகும். இதனை வெளியேறச் செய்ய வேண்டும்.

இவ்விதமாக 3 அல்லது 4 முறை செய்ய வேண்டும். வடிகாலை சீராக வைத்துக் கொண்டு வருடா வருடம் தக்கைப்பூண்டு, கொளுஞ்சி போன்ற பசுந்தாள் உரப்பயிர்களைப் பயிரிட்டு மடக்கி உழுது நீரைத் தேக்கி வடிய

வைத்தால் மிதமான களர் நிலத்தை, அதாவது பி.எச்.8.6 முதல் 8.9 வரை உள்ள நிலத்தை நல்ல விளை நிலமாக மாற்ற முடியும். கரும்பாலைக் கழிவான பிரஸ்மட், தென்னை நார்க்கழிவு, பனை ஓலை மற்றும் புங்கம் தழை முதலியவைகளையும் இட்டு களர் நீக்கலாம். அதிக களர் நிலத்திற்கு அதாவது பி.எச்.8.9க்கு மேல் உள்ள நிலத்திற்கு ஜிப்சம் இடுவது நல்லது.

சுண்ணாம்பு அதிகமுள்ள களர் நிலத்திற்கு  ஜிப்சத்திற்குப் பதிலாக இரும்பு பைரட் இடவேண்டும். பயிரிடும்போது நெல்லுக்கு துத்தநாக சல்பேட்டும், இதரப் பயிர்களுக்கு நுண்ணூட்டக் கலவையும் இடவேண்டும். உரமிடும்போது தழைச்சத்து உரமாக அமோனியம் சல்பேட்டும், மணிச்சத்து உரமாக சூப்பர் பாஸ்பேட்டும் இடுவது நல்லது.

மானாவாரி புன்செய் நிலத்தில் உள்ள களரை நீக்குவது அவ்வளவு சுலபமல்ல. மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்து பரிந்துரை செய்யப்பட்ட நிலத்தை நன்கு ஆழமாக உழவேண்டும். குறுகிய இடைவெளியில் 50-100 வடிகால்கள் அமைக்க வேண்டும். மழைப் பருவம் துவங்கும்போது ஜிப்சம் இட்டு உழுது வைக்க வேண்டும். மழை நீரைத் தேக்கி மண்ணில் ஊடுவருச் செய்ய வேண்டும். இயற்கை எருவாகிய தொழு உரம், கம்போஸ்ட் போன்றவைகளை அதிகமாக உபயோகிக்க வேண்டும்.

### தஞ்சையில் சுற்றுச்சூழல்  விழிப்புணர்வு கருத்தரங்கு

First Published : 25 Jan 2010 05:40:22 AM IST

தஞ்சாவூர், ஜன. 24: தஞ்சாவூர் மாவட்ட தேசியப் பசுமைப்படை சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கம் தஞ்சாவூரில் அண்மையில் நடைபெற்றது.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வை. குமார் தலைமை வகித்தார். தலைமையாசிரியர் பி. ஜெயராஜ் முன்னிலை வகித்தார்.

சென்னை சி.பி.ஆர். சுற்றுச்சூழல் கல்வி மைய கல்வி அலுவலர் உ. திருநாவுக்கரசு புவி வெப்பமயமாதல் குறித்தும், மாவட்ட இடைநிலைக் கல்வித்திட்ட உதவி ஒருங்கிணைப்பாளர் பா. ராம்மனோகர் உயிரின பல்வகைமை மற்றும் மாசுபடுதல் குறித்தும் பேசினர்.

தஞ்சாவூர் மண்டல மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் தாமஸ்துரை, முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் ஜி. ரங்கநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மாவட்டச் சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் வி. இளங்கோவன் வரவேற்றார். மேம்பாலம் அரசு மேல்நிலைப்பள்ளி பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் எஸ். நீலமேகம் நன்றி கூறினார்.

### நெல் பயிர் காப்பீடு செய்யாறு வட்டார விவசாயிகள் கவனத்துக்கு

First Published : 25 Jan 2010 05:21:37 AM IST

திருவண்ணாமலை, ஜன. 24: செய்யாறு வட்டத்திலுள்ள விவசாயிகள் சாகுபடி

செய்துள்ள நவரை நெல் பயிருக்கான காப்பீடு தொகையை செலுத்துமாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அக்ரிகல்ச்சுரல் இன்சூரன்ஸ் கம்பெனி ஆஃப் இந்தியா லிட் நிறுவனம் சார்பில், விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது. செய்யாறு வட்டத்தில் தற்போது நவரை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், வெள்ளம், வறட்சி, புயல், பூச்சிநோய் தாக்குதல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டால் பயிர் காப்பீடு பெறலாம்.

எனவே, பயிர் காப்பீடு செய்வதற்கான விண்ணப்பங்களை அந்தந்த உதவி வேளாண் அலுவலர்களிடம் பெற்றுக் கொள்லலாம். நெல் ஒரு ஏக்கருக்கு ரூ.144 பிரீமியம் செலுத்த வேண்டும்.

பயிர்கள் பாதிப்புக்குள்ளாகும் பட்சத்தில் ரூ.16,036 காப்பீடு பெறலாம். வரும் 15.3.2010-க்குள் பிரிமீயத் தொகையை அந்தந்த தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் செலுத்தலாம்.

**நீர்வள நிலவளத் திட்ட பிரசாரக் கூட்டம்**

First Published : 25 Jan 2010 12:00:00 AM IST

உளுந்தூர்பேட்டை, ஜன.24: தமிழக அரசின் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் சார்பில் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ், பிரசார விளக்கக் கூட்டம் வெள்ளிக்கிழமை உளுந்தூர்பேட்டையில் நடைபெற்றது.

பிரசார விளக்கக் கூட்டத்தை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் இரா.பழனிச்சாமி, ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கடந்த 18-ம் தேதி தொடங்கி வைத்தார். பின்னர் கோமுகி வடிநில பகுதிகளில் சங்கங்களிடையே விவசாயத்தில் எவ்வாறு துரிதமான வளர்ச்சி பெறுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, வெள்ளிக்கிழமை உளுந்தூர்பேட்டைக்கு பிரசார ஊர்திக் குழுவினர் வருகை தந்தனர்.

இதையடுத்து உளுந்தூர்பேட்டையில் நடைபெற்ற கூட்டத்துக்கு பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் ஏ.ரவீந்திரன் தலைமை வகித்தார். வட்டாட்சியர் எஸ்.சிவஞானம் முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் (பொறுப்பு) நிர்மலா, உதவி வேளாண் அலுவலர்கள் பொன்.காமராஜ், முருகன், நடராஜன், சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் நீர்பாசன சங்கத் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**புதிய கண்டுபிடிப்புகள் மக்களை பாதிக்கக் கூடாது**

First Published : 25 Jan 2010 12:36:07 AM IST

சென்னிமலை, ஜன. 24 : ""புதிய கண்டுபிடிப்புகள் சமுதாயத்தையும், மக்களையும் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும்,'' என காந்தி கிராமிய பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ந.மார்க்கண்டன் தெரிவித்தார்.

புரட்சிகர விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் முன்னணி சார்பில் பி.டி. ரக கத்தரியின் பாதிப்புகள் பற்றிய விளக்க பொதுக் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜன.22) சென்னிமலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட காந்தி கிராமிய பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ந.மார்க்கண்டன் பேசுகையில், ளபடம்பி.டி. ரக கத்தரி மனித ஆரோக்கியத்தை பாதிக்கும் என மேலைநாட்டு விஞ்ஞானிகளும், தாவரவியல் ஆராய்ச்சியாளர்களும் ஒதுக்கிவைத்துள்ள நிலையில் நமது நாட்டில் மட்டும் இதற்கு ஒரு சிலர் ஆதரவளித்து வருகின்றனர். ஏற்கெனவே ரசாயன உரங்களால் மண் மலட்டுத்தன்மை அடைந்து விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பி.டி. கத்தரி பயிரிடுவதன் மூலம் நமது பாரம்பரிய விவசாய முறை முற்றிலும் அழிந்துபோகும் என விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

விவசாயிகள், நடுநிலையாளர்கள், பொதுமக்கள் என பலதரப்பினரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில் ஒருசில ஆராய்ச்சியாளர்கள் மட்டும் எதற்காக இதை ஆதரிக்கிறார்கள் என மக்கள் கேட்கின்றனர்.

மக்கள் வரிப் பணத்தை சம்பளமாகப் பெறும் ஆராய்ச்சியாளர்களின் புதிய கண்டுபிடிப்புகள் மக்களுக்கும், சமூகத்திற்கும் பயனுள்ளவைகளாக இருக்க வேண்டும் என்றார்.

ஈரோடு மாவட்ட இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆர்.செல்வம், உயிர்சூழல் பண்ணை அமைப்பாளர் அருணாச்சலம், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் மாவட்ட செயலாளர் சண்முகவேல், விவசாயிகள் கி.வே.பொன்னையன், பொன் ராஜேந்திரன், செல்வராஜ், விஸ்வநாதன் ஆகியோர் பேசினர்.

### மாவட்டத்தில் 24,869 கிணறுகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி:ஆட்சியர்

First Published : 24 Jan 2010 06:45:56 AM IST

தேனி, ஜன.23: தேனி மாவட்டத்தில் 24 ஆயிரத்து 869 கிணறுகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்க மானியம் வழங்கப்படும் என ஆட்சியர் பூ.முத்துவீரன் தெரிவித்துள்ளார்.

பெரியகுளம் பகுதியில் கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை பார்வையிட்ட ஆட்சியர் கூறியதாவது:

மாவட்டத்தில் 3 ஆயிரத்து 667 கிணறுகளில் மழை நீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்க தலா ரூ.4 ஆயிரம் வீதம் மானியம் வழங்கப்பட்டது.

இதில் 127 கிணறுகளில் மட்டுமே மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டம் முழுவதும் 24 ஆயிரத்து 869 கிணறுகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைக்க மானியம் வழங்கப்படும். இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

முன்னதாக ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. இதில் ஆட்சியரின் விவசாயப் பிரிவு நேர்முக உதவியாளர் ராமகிருஷ்ணன், பொதுப்பணித் துறை நீர்வள ஆதாரப் பொறியாளர் காந்தி, விவசாய சங்கத் தலைவர் பாண்டியன், விவசாயிகள் அழகர்சாமி, கண்ணன் உள்பட பலர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், மழை குறைந்து வருவதால் நிலத்தடி நீர் மட்டமும் குறைந்து வருகிறது.

எனவே நிலத்தடி நீரை அதிக ரிக்க மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்க வேண்டும் என்றனர்.

### மூலிகை விழிப்புணர்வு கருத்தரங்கம்

First Published : 25 Jan 2010 05:33:22 AM IST

வேதாரண்யம், ஜன. 24: வேதாரண்யத்தை அடுத்த ஆயக்காரன்புலம்-3 ஆம் சேத்தி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மூலிகை விழிப்புணர்வு கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

கருத்தரங்கத்துக்கு பள்ளி உதவித் தலைமையாசிரியர் பு. முனியாண்டி தலைமை வகித்தார். ஆசிரியர் மு. பரஞ்சோதி முன்னிலை வகித்தார்.

மூலிகை மருத்துவர்கள் என். சண்முகம், எம். சதாசிவம், இரா. கருணாநிதி, பா. மதியழகன் ஆகியோர் மூலிகை குறித்து விளக்கமளித்து பேசினர்.

நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு 1300 மூலிகைச் செடிகள் மற்றும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. நிறைவில் ஆசிரியர் கே. ஆறுமுகம் நன்றி கூறினார்.

**அமராவதி பிரதான கால்வாயில் 3 முறை நீர் வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்**

First Published : 25 Jan 2010 03:43:17 AM IST

திருப்பூர், ஜன.24: அமராவதி பிரதான கால்வாயில் நீர் வழங்க கால நீட்டிப்பு செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு அமராவதி நீர்த்தேக்க பிரதான கால்வாய் பாசன விவசாயிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்க தலைவர் மா.பார்த்தசாரதி முதல்வர் மு.கருணாநிதிக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

அமராவதி பிரதான கால்வாயில் செப்டம்பர் மாதம் முதல் தேதியில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு வேளாண் பணிகள் துவங்கப்பட்டு நாற்று விடப்பட்டன. ஆனால், எதிர்பாராத வறட்சியால் அணையில் நீர்வரத்து குறைந்து 2009 அக்.29ம் தேதி அமராவதி பிரதான கால்வாயில் தண்ணீர் நிறுத்தப்பட்டது.

நவம்பர் மாதம் முதல் வாரத்தில் மழை ஆரம்பித்தவுடன் கிணறு வசதியுள்ள விவசாயிகள் நடவு செய்தனர். கிணறு இல்லாதவர்களின் நாற்றுக்கள் முற்றிலும் வீணாகியது. நவ.16ம் தேதி அணை நிரம்பியது. மீண்டும் நாற்றுவிட்டு டிசம்பரில் 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெற்பயிர்கள் நடவு செய்துள்ளனர். இப்பயிர்களை முழுமையாக காப்பாற்ற மார்ச் 15ம் தேதி வரை தண்ணீர் தேவை.

இதற்கு அணையில் போதுமான அளவு தண்ணீரும் (63 அடி) உள்ளது. ஆனால் அரசு ஆணை இம்மாதம் 31ம் தேதியுடன் முடிவடைவதால் அதன் பின்னர், அமராவதி பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இயற்கை பாதிப்பால் உரிய காலத்தில் நடவு இயலாமல் மீண்டும் நாற்றுவிட்டு நடவு செய்துள்ள விவசாயிகளையும் 10 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்களையும் காக்கும் வகையில் பிப்.6ம் தேதியுடன் மார்ச் 10ம் தேதி வரை 3 முறை நீர் வழங்கும் வகையில் அரசாணை வழங்கி விவசாயிகளை போரிழப்பிலிருந்து காக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**மதுரையில் தென்னை மரங்கள் அழிப்பு:விவசாயத்தில் நஷ்டம் எதிரொலி**

ஜனவரி 22,2010,00:00 IST



மதுரை:மதுரை அருகே விரகனூர் பகுதியில், தென்னை சாகுபடியில் கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் மரங்களை வெட்டி சாய்த்து வருகின்றனர்.விரகனூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் நூறு ஏக்கருக்கும் அதிகமாக தென்னந் தோப்புகள் உள்ளன. விரகனூர் அணைப் பாசனத்தால், இப்பகுதியில் விவசாயிகள் சில ஆண்டுகளுக்கு முன், தென்னை சாகுபடிக்கு ஆர்வம் காட்டினர். மகசூல் கிடைக்கும் பருவத்தில் தென்னை மரத்தில் சிலந்தி நோய் தாக்குதல், பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு, பராமரிப்பு செலவு அதிகரிப்பு போன்ற காரணங்களால் தென்னை விவசாயிகள் நஷ்டத் திற்குள்ளாகினர்.

தோப்புகளில் வந்து தேங்காய் பெற்றுச் செல்லும் வியாபாரிகள் மிகவும் குறைவான விலையை நிர்ணயம் செய்து வருவதால், இனிமேல் இத்தொழிலில் முன்னேற்றம் காணமுடியாது, என்ற விரக்தியில், மாற்றுத் தொழிலையும் தேர்வு செய்யாமல், மரங்களை விவசாயிகள் அழிக்கத் துவங்கியுள்ளனர்.தென்னை விவசாயி பிரான் மலை கூறியதாவது: இப்பகுதியில், 40 ஆயிரம் தேங்காய் கிடைத்த தோப்புகளில் மகசூல் குறைந்து, தற்போது 9 ஆயிரம் தேங்காய் மட்டும் கிடைக்கிறது. விவசாய, தோட்டக்கலைத்துறை உதவியுடன் பல முயற்சிகள் எடுத்தும், எதிர்பார்த்த மகசூலை பெற முடியவில்லை. நோய்தாக்குதல் தொடர்ந்து அதிகரித்தும், இப்பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு உள்ளதாலும், தென்னை விவசாயத்தை கைவிடும் நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது, என்றார்.

தோட்ட பராமரிப்பாளர் மாயாண்டி கூறியதாவது: இளநீர் விற்பனைக்கும் பயனில் லாத வகையில், சிலந்திபூச்சி தாக்குதல் இப்பகுதியில் அதிகம். தோட்டங்களில் மொத்த வியாபாரிகளிடம், ஆயிரம் தேங்காய் விற்பனை செய்யும் போது 125 தேங்காய் கூடுதலாக கொடுக்க வேண்டும். இவை தவிர ஒரு மரத்தில் தேங்காய் பறிப்பதற்கு ஏழு ரூபாய் கூலி கொடுக்க வேண்டும். ஒரு மரத்தில் குறைந்தது 20 தேங்காய் கிடைத்தால் தான் சிறு லாபமாவது கிடைக்கும். கூலியாட்கள் கிடைப்பதும் சிரமம்.

அப்படியே கிடைத்தாலும், பெரிய மரங்களாக இருந்தால் அவர்கள் அதில் ஏறுவது இல்லை. இதனால் தோட்டத்தை பராமரிக்க முடியாமல், இத்தொழிலை கைவிடத் துவக்கியுள்ளனர், என்றார். விரகனூர் தென்னந்தோப்புகளில், நோய் தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயத்துறையும், தேவையான தண்ணீர் கிடைக்க பொதுப்பணித்துறையும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே தென்னையை காப்பாற்ற முடியும். இல்லை எனில் இந்த விவசாய நிலங்கள் எல்லாம் விரைவில் "பிளாட்கள்" ஆக மாறக்கூடும்.

**மாறும் விவசாயம்! பட்டுக்கூட்டில் கிடைத்தது லாபம் : கஷ்டப்பட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

அன்னூர் : மல்பெரி பயிரில் ஏக்கருக்கு 80 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஆண்டுதோறும் குறைந்து வரும் மழை; கட்டுபடியாகாத விளைபொருள் விலை; அதிகரித்து வரும் உரம் மற்றும் பூச்சி மருந்து விலை; வேலைக்கு ஆட்கள் கிடைக்காதது; நிலத்தடி நீர் மட்டம் குறைவு, ஆகியவற்றால் கோவை புறநகரில் விவசாய பரப்பு குறைந்து வருகிறது. பல நூறு ஏக்கர் விவசாய நிலம் "லே-அவுட்'களாக அமைக்கப்பட்டு "சைட்' விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில், மல்பெரி பயிர் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு, கோவை புறநகர் விவசாயிகளுக்கு லாபகரமாக உருவாகியுள்ளது.

கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சி மற்றும் அன்னூர் வட்டாரத்தில் அதிக அளவில் மல்பெரி பயிரிடப்படுகிறது. அடுத்தபடியாக, சுல்தான்பேட்டையில் பயிரிடப்படுகிறது. துவக்கத்தில் குறைவாக பயிரிடப்பட்ட மல்பெரி, ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து, தற்போது அன்னூர் வட்டாரத்தில் மட்டும் 250 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. இதில், ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு செலவு போக 80 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அன்னூர் வட்டாரத்தில் அல்லப்பாளையம், பொன்னே கவுண்டன்புதூர், பெத்திகுட்டை, பிள்ளையப்பம்பாளையம், குமாரபாளையம் ஆகிய இடங்களில் மல்பெரி பயிரிடப்பட்டு பட்டுப்புழு வளர்க்கப்படுகிறது.

அன்னூர் பகுதி மல்பெரி விவசாயிகள் கூறியதாவது: வீ1, எம்.ஆர். 2 ஆகிய இரண்டு வீரிய ரக மல்பெரி அதிகம் பயிரிடப்படுகிறது. நாற்று முறையில் நடப்படும் மல்பெரியில் முதல் முறை 90 நாட்களுக்கு பின் இலைகளை பறிக்கலாம். அதன்பின், ஐம்பது நாட்களுக்கு ஒரு முறை இலைகளை பறிக்கலாம். ஒரு ஏக்கருக்கு 5,400 செடி நடலாம். மல்பெரி பயிரிட்டவுடன் பட்டுப்புழு வளர்ப்பு கூடம் தயார் செய்து கொள்ள வேண்டும். மல்பெரி பயிரிடும் போது மூன்று பிரிவுகளாக பிரித்து பயிரிட வேண்டும்.

இதன் மூலம், ஒவ்வொரு 25 நாட்களுக்கு ஒரு முறை இலைகளை பறித்து பட்டுப்புழுக்களுக்கு அளிக்க முடியும். பட்டுப்புழுக்கள் மல்பெரி இலைகளை உட்கொண்டு மூன்று வாரங்களில் பட்டுக்கூடு கட்டத்துவங்கி விடுகின்றன. அதிலிருந்து, நான்கு நாட்களுக்கு பின் பட்டுக்கூடுகளை எடுத்து சுத்தப்படுத்தி கோவையிலுள்ள மாவட்ட பட்டுப்புழு வளர்ப்பு அங்காடியில் நடக்கும் ஏலத்தில் விற்கிறோம். எவ்வளவு பட்டுக்கூடு எடுத்துச்சென்றாலும் ஏலத்தில் விற்றுப்போகிறது.

ஒரு ஏக்கரில் மல்பெரி பயிரிட்டு, அந்த இலைகளை பட்டுப்புழுக்களுக்கு அளித்து, பட்டுக்கூடுகள் எடுத்து விற்பனை செய்வதன் மூலமாக, அனைத்து செலவுகளும் போக ஆண்டுக்கு 80 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதனால், மேலும் பல விவசாயிகள் மல்பெரி பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

அல்லப்பாளையம் விவசாயி காளியப்பன் கூறியதாவது: வாழை மற்றும் மஞ்சளுக்கு தேவைப்படும் தண்ணீரில் பாதியளவு தண்ணீர் இருந்தாலே மல்பெரிக்கு போதுமானது. வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை நடவு செய்த ஓராண்டு கழித்தே வருமானம் பார்க்க முடியும். ஆனால், மல்பெரியில் பட்டுக்கூடு விற்பனை மூலம் ஒவ்வொரு மாதமும் வருமானம் கிடைக்கிறது.

தற்போது, பட்டுக்கூடு கிலோ 185 ரூபாய்க்கு விற்பனையாகிறது. விலை மேலும் அதிகரித்தால் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். நாளுக்கு நாள் பட்டுக்கூடுகளுக்கு தேவை அதிகரித்து வருகிறது. தண்ணீர் குறைவாக உள்ள விவசாயிகள், இந்த பயிர் மூலம் கூடுதல் வருமானம் பெறலாம்.

பட்டுவளர்ச்சித் துறையினர், மல்பெரி பயிரிட ஏக்கருக்கு 4,125 ரூபாய் மானியம் தருகின்றனர். பட்டுப்புழு கூடம் அமைக்க 50 ஆயிரம் ரூபாயும், சொட்டு நீர் பாசனம் அமைக்க ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும் மானியம் தருகின்றனர். மல்பெரியை ஒரு முறை நடவு செய்தால் 20 ஆண்டுக்கு பலன் தரும்.
களர் மண் தவிர மற்ற அனைத்து மண்ணிலும் நன்கு வளரும். மண் புழு உரம் உள்ளிட்ட இயற்கை உரம் பயன்படுத்தினால் விளைச்சல் மேலும் அதிகரிக்கும். சொட்டு நீர் பாசனம் உள்ளதால், களை வருவதில்லை. இதனால் களை எடுக்க, தண்ணீர் பாய்ச்ச ஆட்கள் தேவையில்லை. இவ்வாறு காளியப்பன் தெரிவித்தார்.

**பொங்கலுக்குப்பின் கொப்பரை மார்க்கெட் சூடுபிடிக்கவில்லை! மந்தமாக விற்பதால் விவசாயிகள் அதிர்ச்சி**

பொள்ளாச்சி : பொங்கல் பண்டிகைக்கு கொப்பரை மார்க்கெட் எதிர்பார்த்தபடி சூடுபிடிக்காமல், தற்போதும் மந்த நிலையில் உள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர்.

தேங்காய் உற்பத்தி குறைந்துள்ள நிலையில் தற்போது உற்பத்தியாகும் தேங்காய் உணவு தேவைக்கு மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. கொப்பரை உற்பத்திக்கு தேங்காய் அதிகளவில் செல்லவதில்லை. மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய் விலை குறைவாக இருப்பால், கொப்பரையை காட்டிலும் தேங்காய்க்கு அதிக விலை

கிடைக்கிறது.

காங்கேயம் வெளிமார்க்கெட்டில் ஜன., 16ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு அதிகபட்சமாக 35 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 750 ரூபாயும், தேங்காய் பவுடர் ஒரு கிலோவுக்கு 50 ரூபாயும் விலை கிடைத்தது.

தென்னந்தோப்புகளில் ஒரு தேங்காய் 6.25 முதல் 6.50 வரையிலும் கொள்முதல் செய்யப்பட்டது. காய்ந்த தேங்காய் டன்னுக்கு 12,100 ரூபாய்க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பச்சை தேங்காய் டன்னுக்கு 10,600 விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்த மார்க்கெட்டிலும், சில்லரை வர்த்தகத்திலும் தேங்காய் விலை உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு அதிகபட்சமாக 34 ரூபாய் விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 740 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோ 49 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. தென்னந்தோப்புகளில் காய்ந்த தேங்காய் டன்னுக்கு 11,200 ரூபாய் அதிகபட்சமாக விலை கிடைத்தது. பச்சை தேங்காய்க்கு அதிகபட்சமாக 10,200 ரூபாய் விலை கிடைத்தது. ஒரு தேங்காய்க்கு 5.30 முதல் 6.00 ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது ஒட்டுமொத்த தேங்காய், கொப்பரை மார்க்கெட் விலை சரிந்துள்ளது. இதனால் விவசாயிகள் மற்றும் கொப்பரை உற்பத்தியாளர்கள் அதிர்ச்சியில் உள்ளனர்.

கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறியதாவது: பொங்கல் பண்டிகைக்கு எதிர்பார்த்தபடி தேங்காய், கொப்பரை, தேங்காய் எண்ணெய் விலை உயரவில்லை. தற்போது உற்பத்தியாகும் தேங்காய் முழுவதும் உணவு தேவைக்கு மட்டும் செல்கிறது. எண்ணெய் மார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய் விலை குறைந்துள்ளதால் கொப்பரை கேட்பு இல்லாத நிலை உள்ளது. கொப்பரை உற்பத்தி இல்லாத நிலையில், கேட்பும் இல்லாததால் தேங்காய் விலையும் குறைந்துள்ளது.மார்ச் மாதம் முதல் புதுத்தேங்காய் வரத்து துவங்கி விடும். இந்நிலையில் தேங்காய் மார்க்கெட் மந்தமாக உள்ளதால், அடுத்த ஆண்டும் தேங்காய் விலை பாதிக்கப்படும். தேங்காய் மார்க்கெட் பாதிக்காமல் இருக்க அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது விவசாயிகளிடம் இருந்து கொப்பரைக்கு பதிலாக தேங்காயை நேரடியாக கொள்முதல் செய்யும் திட்டத்தை துவங்க வேண்டும். இவ்வாறு, கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**உதவி பேராசிரியருக்கு தமிழக அரசு விருது**

மேட்டுப்பாளையம் : வனக்கல்லூரி உதவி பேராசிரியர் பாவேந்தன் எழுதிய புத்தகத்திற்கு  தமிழக அரசு "சிறந்த நூலுக்கான' பரிசு வழங்கியுள்ளது.

மேட்டுப்பாளையம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உதவி பேராசிரியராக பணிபுரிபவர் பாவேந்தன். இவர் "ஆதி திராவிடன்' என்ற நூல் எழுதினார். தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை தகவல் தொடர்பு எனும் வகைப்பாட்டில் இந்த நூலை 2008 ம் ஆண்டிற்கான சிறந்த நூலாக தேர்வு செய்துள்ளது.
சென்னை வள்ளுவர் கோட்டத்தில்  தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்த விழாவில்,பாவேந்தனுக்கு 20 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கினார். விழாவில், துணை முதல்வர் ஸ்டாலின் உட்பட பல்வேறு அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

**பேராசிரியருக்கு மானியக்குழு நிதி**

பொள்ளாச்சி : பேராசிரியரின் ஆராய்ச்சிக்கு பல்கலை மானியக்குழு நிதியுதவி வழங்கியுள்ளது.
பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரி முதல்வர் ராஜ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கை: என்.ஜி.எம்., கல்லூரி

பொருளியல் துறை தலைவர் கிருஷ்ணதுளசிமணி தென்னை நார் உற்பத்தி தொழிற்சாலை குறித்து ஆய்வு செய்துவருகிறார். "கோவை மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த தொழிலான தென்னை நார் உற்பத்தி தொழிற்சாலைகளில் பிரச்னைகளும் அதன் முன்னேற்றத்திற்குரிய வாய்ப்புகளும்' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆராய்ச்சி குறித்த அறிக்கை பல்கலை மானியக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. இந்த அறிக்கையை பரிசீலித்த குழு ஆராய்ச்சிக்காக, பேராசிரியருக்கு ஏழு லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. ஆராய்ச்சி இரண்டு ஆண்டுகள் நடக்கிறது. ஆய்வின் முடிவில், இதன் அறிக்கைகளையும், பரிந்துரைகளையும், பல்கலைக்கழக மானியக்குழுவில் சமர்பிக்கப்படவுள்ளது. இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வேளாண் இணை இயக்குனர் ஆய்வு**

சிதம்பரம் : சிதம்பரம் உழவர் சந்தையை வேளாண் இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.
சிதம்பரம் வடக்கு மெயின்ரோட்டில் இயங் கும் உழவர் சந்தையில் காய்கறிகள்,பழங்கள், உணவு காளான் விற் பனை செய்யப்படுகிறது. சந்தையின் செயல்பாடுகள் குறித்து வேளாண் இணை இயக்குனர் வேலாயுதம், துணை இயக்குனர் தனவேல் உள் ளிட்ட அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.
பின்னர் உழவர் சந்தையின் புதிய செயல்பாடுகள் குறித்து ஆர்.டி.ஓ., ராமராஜூ, தாசில்தார் காமராஜ் ஆகியோர்களிடம் ஆலோசனை நடத்தினர். அப் போது வேளாண் அலுவலர்கள் சித்ரா, சுரேஷ், உதவி வேளாண் அலுவலர் கள் வேலு, கலியமூர்த்தி, ராயர் முத்துசரவணன் உடனிருந்தனர்.
விவசாயிகளுக்கு புதிய அடையாள அட்டை வழங்குவதுடன் நுகர் வோர்களை உழவர் சந் தைக்கு அதிகளவில் வரவழைக்கும் வகையில் சிதம்பரம் சுற்றுப்பகுதியில் உள்ள 20 கிராமங் களை தேர்வு செய்து புதிய முயற்சிகளை தோட்டக்கலையுடன் இணைந்து செயல்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் தமிழ் நாடு விவசாயிகள் சங்க கூட்டம், ஒன்றிய தலைவர் ராஜூ தலைமையில் நடந்தது. மாவட்ட செயலாளர் சச்சிதானந்தம் முன்னிலை வகித்தார். ஒன்றிய செயலாளர் அஜாய்கோஸ் வரவேற்றார். இதில் நல்லமநாயக்கன்பட்டி பெரியகுளம், ஏ.வெள்ளோடு கரடிபட்டி சில்லோடை, சீலப்பாடி மூக்கன் குளம் உள்ளிட்ட நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், ஓடைகளை அகலப்படுத்தல், விளைநிலங்களை வீட்டு மனைகளாக மாற்றுவதை கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட அம்சங்களை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒன்றிய துணைத்தலைவர் சுப்பையா, செயலாளர் ஜோசப் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மஞ்சளாறு பாசன பகுதியில் நெல் விவசாயம் பாதிப்பு**

வத்தலக்குண்டு : மஞ்சளாறு பாசன பகுதியில் நெல் விவசாயம் தண்ணீர் இல்லாமல் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. கிணற்று நீரை வைத்து வாழை, தக்காளி விவசாயம் செய்யப்படுகிறது.
மஞ்சளாறு பாசன பகுதிகளான தேவதானப்பட்டி, செங்குளத்துப்பட்டி, கெங்குவார்பட்டி, ஜி.தும் மலப்பட்டி, கணவாய்ப் பட்டி, வத்தலக்குண்டு, கட்டகாமன்பட்டி, பழைய வத்தலக்குண்டு, கரட்டுப் பட்டி, குன்னுவாரன் கோட்டை ஆகிய ஊர்களில் கடந்த மூன்று ஆண்டுகளாக பருவமழை சரியாக இல்லை. இந்த பகுதியில் உள்ள செங்குளம்,மத்துவார்குளம், கணவாய்பட்டி கண்மாய்,வீரன்குளம்,பெரிய கண்மாய், குன்னுவாரன் கோட்டை கண்மாய் ஆகிய கண்மாய்கள் நிரம்பவில்லை. மஞ்சளாறு அணைக்கு நீர் ஆதாரமாக இருக்கும் கொடைக்கானல் மலைப்பகுதியிலும் போதிய மழை பெய்யாததால் நூற்றுக்கணக்கான ஏக்கரில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பருவமழை பெய்து கண்மாய்கள் நிரம்பி உபரி

நீர்(மறுகால்) வெளியேறிக் கொண்டிருக்கும். இந்த ஆண்டில் மிக குறைந்த அளவு தண்ணீரே உள்ளது. கிணறுகள் உள்ள பகுதிகளில் வாழை, கரும்பு, தக்காளி போன்ற பயிர்களும், சோளம், கம்பு போன்ற மானாவாரி பயிர்களும் செய்து வருகின்றனர். போதிய மழை இன்றி விவசாயம் செய்ய முடியாமல் பொருளாதார நிலையில் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**வறட்சியிலிருந்து தப்பிக்க மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம்**

அந்தியூர்:வறட்சியிலிருந்து தப்பிக்க அந்தியூர் பகுதி மானாவரி விவசாயிகள் பெரும்பாலானோர் மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.அந்தியூர் சுற்று வட்டார கிராமங்களான மைக்கேல்பாளையம், நஞ்சமடைகுட்டை, மலைகருப்புச்சாமி கோவில், செல்லம்பாளையம், கோவிலூர், கும்பரவாணி, அத்தாணி, வெள்ளித்திருப்பூர் ஆகிய இடங்களில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கிணற்றுப் பாசன விவசாயிகள் கரும்பு, வாழை, பருத்தி, மஞ்சள் போன்ற பயிர்களை சாகுபடி செய்து வந்தனர். கரும்புக்கு சரியான விலை கிடைக்காததால், விவசாயிகள் கரும்பு பயிரிடுவதை விரும்புவதில்லை. நேரம் வீணாதல், கூலியாட்கள் பிரச்னை, பண விரயம் என பெரும் சிரமத்துக்குள்ளாகி, கரும்பு விவசாயிகள் நஷ்டத்துக்கு தள்ளப்படுகின்றனர். மூன்று மாதத்துக்கு முன், தங்கத்தின் விலையை காட்டிலும், மஞ்சள் விலை 13 ஆயிரத்தை தாண்டி சாதனை படைத்தது. ஈரோடு மாவட்ட விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியில் திளைத்தனர். தற்போதைய சூழ்நிலையில், மஞ்சளின் விலை 9,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அந்தியூர் பகுதியில் மஞ்சள் அறுவடை தற்போது நடந்து வருகிறது. அந்தியூர், வெள்ளித்திருப்பூர், ஜரத்தல், சென்னம்பட்டி, அத்தாணி போன்ற பகுதிகளில் வாழை பயிரிடப்பட்டு, பாதுகாப்போடு வளர்க்கப்பட்டு வருகிறது.

மற்ற பயிர்களை விட எளிதான சாகுபடி யுக்தி கொண்ட மக்காச்சோளம் பயிரிடுவதில் பெரும்பாலான விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கோடை, குளிர், மழை என அனைத்து காலத்திலும் மக்காச்சோளம் விதைக்கப்படுகிறது. 120 நாட்களில் அறுவடைக்கு தயாராகும் பயிருக்கு ஐந்து முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது.

நடப்பாண்டு பருவ மழை பொய்த்து போனதால், ஏரிகளிலும், கிணற்றிலும் போதுமான அளவுக்கு தண்ணீர் இல்லை.இந்த நிலை நீடிக்கும் வேளையில், இன்னும் சில மாதங்களில் கிணற்று நீர் வற்றி விடும் அபாயமும் ஏற்படலாம்.

இதை கருத்தில் கொண்ட கிணற்று விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிடுவதற்கு தயாராகி வருகின்றனர். நல்ல பராமரிப்பின் மூலம் இவற்றின் மகசூலை அதிகளவுக்கு பெருக்க முடியும் என விவசாயிகள் நம்புகின்றனர்.இப்பகுதியில் அதிகளவில் "பயனியர் 07' என்ற ரக மக்காச்சோள விதையை பயிரிடுகின்றனர். ஒரு ஏக்கர் பரப்பளவில் பயிரிட ஐந்திலிருந்து ஆறு கிலோ விதை தேவை. இரண்டு முறை களை எடுக்கப்பட்டு, அடி உரம் இடப்படுகிறது. நல்ல முறையில் விளையும் மக்காச்சோளம் மூட்டை ஒன்றுக்கு 900 ரூபாய் வரை விலை போகிறது. இரண்டாம் தர மக்காச்சோளம் மூட்டை 800 முதல் 850 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ரு ஏக்கரில் 25 லிருந்து 30 மூட்டை மக்காச்சோளம் கிடைக்கலாம். பாதி விளைந்த நிலையில், வேக வைத்து சாப்பிடுவற்கு அறுவடை செய்யப்படுகிறது.

ஒரு சோளக்கதிரின் விலை இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இது ஆடி பண்டிகை காலங்களில் அதிகளவில் அந்தியூர் குருநாத ஸ்வாமி கோவிலில் குவிந்திருக்கும். ஒரு கட்டத்தில் மானாவரி விவசாயிகள் மட்டும் பயிரிட்ட மக்காச்சோள பயிரை, வறட்சியிலிருந்து தப்பிக்க அனைத்து விவசாயிகளும் பெரும் ஆர்வத்துடன் பயிரிட்டு வருகின்றனர்.

**பனிப்பொழிவால் சிறிய வெங்காயம் உற்பத்தி பாதிப்பு : கோபி கொங்கர்பாளையம் விவசாயிகள் கவலை**

கோபிசெட்டிபாளையம்:கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடும் பனிப் பொழிவால் சிறிய வெங்காயம் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கடும் சோகத்தில் உள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் கோபியை அடுத்த கொங்கர்பாளையம், விநோபா நகர், வாணிப்புத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் 2,500 ஏக்கரில் ஆண்டுதோறும் இருமுறை சிறிய வெங்காயம் பயிரிடப்படுகிறது. மூன்று மாதத்துக்கு முன் வழக்கம் போல் கொங்கர்பாளையம் பகுதியில் சிறிய வெங்காயம் பயிரிடப்பட்டது.

வெங்காயம் விளைச்சல் முற்றும் நேரத்தில், கடந்த மாதம் கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டது. மேலும் புயல் காரணமாக அவ்வப்போது கோபி பகுதிகளில் அடிக்கடி மழையும் பெய்தது. கடுமையான பனிப்பொழிவு மற்றும் சாரல் மழை காரணமாக, கோபி கொங்கர்பாளையம் பகுதிகளில் சிறிய வெங்காயம் விளைச்சல் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டது. ஆகஸ்ட் மாதத்தில் சிறிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் வரை விற்றது. ஆனால், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட பனிப் பொழிவால் சிறிய வெங்காயத்தின் விளைச்சல் பாதிக்கப்பட்டு, வெங்காயம் முதிர்ச்சியடையாமல் கருகியது. வழக்கமாக ஏக்கருக்கு ஆறு டன் முதல் ஏழு டன் வரை சிறிய வெங்காயம் விளைச்சல் கிடைக்கும். விளைச்சல் பாதிப்பால் ஒரு ஏக்கருக்கு இரண்டு டன் மட்டுமே கிடைக்கிறது. அதுவும், வெங்காயத்தின் அளவு மிகவும் சிறியதாக உள்ளது.

இதனால், கிலோவுக்கு ஐந்து ரூபாய் கூட விலை கிடைப்பதில்லை. ஆந்திரா மற்றும் கர்நாடகா பகுதிகளில் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளம் பாதிப்பால் உற்பத்தி குறைந்தது. வரத்து குறைவால் பெரிய வெங்காயம் விலை கடுமையாக உயர்ந்தது. இதனால், கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் அதிகளவில் பெரிய வெங்காயத்துக்கு மாற்றாக சிறிய வெங்காயத்தை பயிரிட்டனர். அதிக விலை கிடைக்கும் என எதிர்பார்த்தனர். ஆனால், பனி மற்றும் சாரல் மழையால் சிறிய வெங்காயம் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கோபி மற்றும் கொங்கர்பாளையம் பகுதி விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

**சாகுபடிக்கு நீர் திறப்பதா; சீரமைப்புக்கு நீர் அடைப்பதா?**

ஈரோடு: காலிங்கராயன் கால்வாயில் மார்ச் இறுதியில் 11.64 கோடி ரூபாய் செலவில் சீரமைப்பு பணி துவங்குவதால், இரண்டாம் போக நெல் சாகுபடியை பிந்தி துவக்கியுள்ள விவசாயிகளுக்கு அறுவடை வரை தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் எழுந்துள்ளது. காலிங்கராயன் கால்வாய் 766 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது. காலிங்கராயன் பாளையத்திலிருந்து, ஆவுடையார் பாளையம் வரை 91 கி.மீ., நீளம் உள்ள இக்கால்வாய் மூலம் ஆண்டு தோறும் 17 ஆயிரம் ஏக்கர் விளைநிலம் பாசன வசதி பெறுகிறது. இந்த பாசனத்தில் அதிகளவு நெல், கரும்பு, வாழை, மஞ்சள் பயிரிடப்படுகிறது. கால்வாயில் இருபுறமும் நான்கு சக்கர வாகனம் சென்று வரும் நிலையில் சாலைக்காக பாதையுடன் கால்வாய் அமைக்கப்பட்டது. ஆனால், கால்வாயின் இருபுறமும் உள்ள பாதை பெரும்பாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.
ஒன்றரை ஆண்டுக்கு முன் கால்வாயில் இடதுபுறம் உள்ள கரையை சர்வே செய்து, பொதுப்பணித்துறை சார்பில் எல்லைக்கல் நடப்பட்டது. அதன்படி பெரும்பாலான விவசாயிகள் கரையை ஆக்கிரமித்து அதில் சாகுபடி பணிகளை மேற்கொள்வது தெரிந்தது. பிராமண பெரிய அக்ரஹாரம் பகுதியிலிருந்து, ஈரோடு வைராபாளையம், கருங்கல்பாளையம் பகுதிகளில், கால்வாயின் வலது புறத்தில் நேரடியாகவே தெருக்களில் உள்ள கழிவுநீர் கலக்கிறது. பிளீச்சிங் பட்டறைகள் கழிவுநீர் செல்லும் குழாய்களை நேரடியாகவே கால்வாய்க்குள் அமைத்துள்ளன. இதனால், கால்வாயில் பெரும்பாலான நாட்களில் தண்ணீர் சாக்கடை போல கருப்பு நிறத்தில் தான் செல்கிறது. இதனால், விளைநிலங்கள் பாதிக்கப்பட்டு, இந்த கால்வாய் பகுதியில் உற்பத்தியாகும் மஞ்சள், கரும்பு, நெற்பயிரில்

ரசாயன தாக்கம் உள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால், காலிங்கராயன் பாசனத்தில் உற்பத்தியாகும் மஞ்சளுக்கு பிற பகுதி மஞ்சளை விட குறைவான விலை நிர்ணயிக்கப்படுகிறது.

சென்றாண்டு ஈரோடு வந்த தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன், கால்வாயை பார்வையிட்டார். பின்னர் அவர், "விவசாயிகள் கூறியதைவிட கழிவு அதிகம் கலக்கிறது. கழிவு கலப்பதை தடுக்க கான்கிரீட் தடுப்பு சுவரும், வாகனங்கள் சென்று பாதையும் அமைக்கும் பணிக்கு விரைவில் நிதி ஒதுக்கப்பட்டு துவங்கப்படும்' என கூறினார்.

அதன்படி, 11.64 கோடி ரூபாய் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தின் படி, கால்வாயில் உள்ள 382 மதகுகள் சீரமைக்கப்படுவதுடன், ஏழு பாலங்கள், ஆர்.என்.புதூரில் இருந்து பி.பி., அக்ரஹாரம் வரை ஆறு மைல் தூரத்துக்கு வலது கரையில் கான்கிரீட் தடுப்பு சுவர், 56 மைல் தூரமும் படித்துறை மற்றும் 8,000 சதுர கி.மீ., தூரம் பாதை சீரமைக்க திட்டமிட்டு சென்றாண்டு மார்ச் மாதம் டெண்டர் விடப்பட்டது.
சென்றாண்டு ஒரே நிறுவனம்தான் டெண்டருக்கு விண்ணப்பித்தது. அந்த நிறுவனமும் கூடுதலாக தொகை நிர்ணயிக்க கேட்டதால், டெண்டர் விடாமல் பணி நிறுத்தப்பட்டது. ஆனால், அரசு கூறியபடி சென்றாண்டு, காலிங்கராயனில் மார்ச் மாதமே தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. ஏற்கனவே, சாகுபடி பணிகளை முடித்த விவசாயிகள் சென்றாண்டு போதிய விளைச்சல் இல்லாமலேயே அறுவடையை செய்ததால், பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. நடப்பாண்டில், சீரமைப்பு பணிக்காக மார்ச் 15ம் தேதி முதல் ஜூன் 15ம் தேதி வரை கால்வாயில் நீர் திறப்பு நிறுத்தப்படுகிறது. தற்போது இப்பணிகளை மேற்கொள்ள மூன்று நிறுவனங்கள் டெண்டர் கோரியுள்ளன. பொதுப்பணித்துறை நீர்ப்பாசன பிரிவு அதிகாரிகள், "நடப்பாண்டில் கண்டிப்பாக திட்டமிட்டபடி பணிகள் முடிக்கப்படும்' என தெரிவித்துள்ளனர்.அதே வேளை, காலிங்கராயன் கால்வாய் பாசனத்தில் இரண்டாம் போகம் நெல் நடவை பிந்தி துவக்கியுள்ள விவசாயிகளுக்கு, ஏப்ரல் முதல் வாரத்துக்கு பின்னர்தான் அறுவடை துவங்கும். மார்ச் மாதம் தண்ணீர் நிறுத்தப்பட்டால், நெல் அறுவடைக்கு தயாராகும் நிலையில் தண்ணீரின்றி நெற்பயிர் பாதிக்கப்படும். எனினும், கடைசி வேளையில் நீர் திறப்பு நீட்டிக்கப்படும் என்று விவசாயிகள் நம்புகின்றனர். அவ்வாறு நீர் திறப்பு நீட்டிக்கப்பட்டால் காலிங்கராயன் சீரமைப்பு பணியும் தாமதாகும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. சாகுபடிக்காக தண்ணீர் திறப்பை நீட்டிப்பதா; அல்லது மார்ச் மாதம் தண்ணீரை அடைத்து குறிப்பிட்டபடி கால்வாய் சீரமைப்பு பணியை துவக்குவதா என்ற தர்மசங்கடமான நிலை அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

**பயிர்களுக்கு மானிய விலை டி.ஏ.பி., உரம் வேளாண் அதிகாரி தகவல்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயறு வகை பயிர்களுக்கு, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானிய விலையில் டி.ஏ.பி., உரங்கள் வழங்கப்படுகிறது. இது குறித்து வேளாண்மை இணை இயக்குனர் ராஜன் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 66 ஆயிரத்து 900 ஹெக்டர் பரப்பில் ஆண்டு தோறும் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

நடப்பு பருவத்தில் மட்டும் இதுவரை 64 ஆயிரத்து 473 ஹெக்டர் பரப்பில் துவரை, உளுந்து, காராமணி, பச்சைபயறு, மொச்சை, கொள்ளு ஆகிய பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பயறு வகை பயிர்களுக்கு இடையில் மானாவாரியாக நிலக்கடலை, ராகி, மா ஆகிய பயிர்கள் ஊடுபயிராக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பொதுவாக விவசாயிகள் நெல் மற்றும் இதர பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உயிர் உரம், உரங்கள் இடுவது போல மானாவாரி பயறு வகைகளுக்கு உரங்கள் உட்பட ஏதும் இடுவதில்லை. அதனால் மானாவாரி பயறு வகைகள் குறைவாகவே மகசூல் கொடுக்கிறது. அதை கருத்தில் கொண்டு பயறு வகைகளின் உற்பத்தியை பெருக்க டி.ஏ.பி., உரத்தை இலை வழியாக தெளிக்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவுக்கு ஹெக்டேருக்கு 200 ரூபாய் மானியத்தில் டிஏபி உரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள்

சம்பா நெல் அறுவடைக்கு பிறகு இறவை ராகி மற்றும் இறவை நிலக்கடலை சாகுபடி செய்வதையே வழக்கமாக கொண்டுள்ளனர். இந்நிலையில், ஜனவரி -பிப்., மாதங்களில் இறவை நிலக்கடலை, ராகி பயிர்களுக்கு பதிலாக பயறு வகைகளான உளுந்து, காராமணி ஆகிய பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும்.

குறைந்த பட்சம் உயிர் உர நேர்த்தி, டி.ஏ.பி., தெளிப்பு ஆகிய தொழில் நுட்பங்களை பின்பற்றினால் 65 முதல் 70 நாட்களில் ஏக்கருக்கு 300 லிருந்து 400 கிலோ விதைகள் கிடைக்கப்பெற்று ஒரு ஏக்கரில் 17 ஆயிரத்து 500 ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை லாபம் பெறலாம். பயறு வகை பயிர்களுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மானிய விலையில் டிஏபி உரம் வழங்குவதற்கு கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு ரூ.2 லட்சம் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு முறை தெளிப்பதற்கு ஹெக்டேருக்கு 12.5 கிலோ வீதம் இரண்டு முறை தெளிப்பதற்கு மொத்தம் 25 கிலோ டிஏபி வேளாண்மை துறை மூலம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், இந்த வாய்ப்பை பயன்படுத்தி அந்தந்த பகுதி வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி மானிய விலையில் டி.ஏ.பி., உரம் பெற்று தக்க தருணத்தில் பயறு வகை பயிர்களுக்கு தெளித்து கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**நாகை மாவட்டத்தில் விதை கிராமத் திட்டம் தொடக்கம்**

நாகப்பட்டினம்:நாகை மாவட்டம் அரசூர் மற்றும் உளுத்துக்குப்பை கிராமங்களில் விதை கிராம தொடக்க விழா நடந்தது. வேளாண்துறை ஆணையர் கோசலராமன் தலைமை வகித்து விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்களை வழங்கி பேசியதாவது: இந்தியாவிலேயே செம்மை நெல் சாகுபடி திட்டத்தை தமிழகம் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. செம்மை நெல் சாகுபடி மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம். தமிழகத்தில் உள்ள 20 லட்சம் எக்டேர் நிலப்பரப்பில் 7.5 லட்சம் எக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்தை தொடர்ந்து ஒரிசா, கர்நாடகா, திரிபுரா ஆகிய மாநிலங்களில் செம்மை நெல் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நாகை, திருவாரூர், சிவகங்கை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விதை கிராமத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு அரசு 24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.
இதில் 2 லட்சம் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி செய்வது குறித்த பயிற்சி அளிக்க 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் நெல் ஆயிரத்து 600 டன், சிறுதானியம் 200 டன், பயிறு வகை 660 டன், எண்ணை வித்து 3 ஆயிரத்து 600 டன் விதைகளை 50 சதவீத மானியத்தில் விநியோகிக்க 10.32 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 52 ஆயிரத்து 900 விதை சேமிப்பு கலன்கள் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 32 சதவீத மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 25 சதவீத மானியத்திலும் வழங்க 7.68 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
தமிழகத்தில் 95 விதை சேமிப்பு கிடங்குகள் கட்ட 22.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் சேமிப்பு கிடங்குகள் கட்டப்பட்டு வருகிறது. நாகை மாவட்டத்தில் விதை கிராமத்திட்டத்தின் கீழ் 1.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார். வேளாண் இணை இயக்குனர் கருணாகரன், துணை இயக்குனர்கள் மணிவண்ணன், கோவிந்தசாமி, உதவி இயக்குனர் சம்பத்குமார், அரசூர் பஞ்., தலைவர் தங்கவேல், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கருணாநிதி, ஒன்றிய குழு உறுப்பினர் சித்ரா, காவிரி பாதுகாப்பு சங்க தலைவர் அலெக்ஸ் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மீன் உணவுப் பொருள் தயாரிப்பு பயிற்சி முகாம்**

பொறையார்:தரங்கம்பாடியில் மலிவு விலை கடல் மீன்களைப் பயன்படுத்தி மீன் உணவுப் பொருள் தயாரிக்கும் பயிற்சி முகாம் நடந்தது.ரோசா தொண்டு நிறுவன இயக்குனர் வெரோனிக்கா தலைமை வகித்தார். நாகை மாவட்ட தொழில்மைய பொது மேலாளர் மாயத்தேவர் பயிற்சி முகாமை தொடக்கி வைத்தார். தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் ரத்தினகுமார் பேசினார்.மலிவான கடல் மீன்களில் இருந்து மதிப்பூட்டிய மீன் உணவுப்பொருள் தயாரித்தல் கையேடு வெளியிடப்பட்டது. மீன்பதப்படுத்துதல் மற்றும் விற்பனை சார்ந்த தொழிலில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மதிப்பூட்டிய மீன் உணவுப் பொருள் தயாரிக்கும் முறை மூலம் வருவாயை அதிகரிப்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. மூன்று நாட்கள் நடந்த பயிற்சி முகாமில் மீனவ மகளிர் பலர் கலந்துகொண்டனர்.

**மிளகாய் காப்பீடு தொகை வழங்குவதில் இழுபறி : விவசாயிகள் அதிருப்தி**

சாயல்குடி : கடலாடி தாலுகாவில் பாதிக்கப்பட்ட மிளகாய் சாகுபடிக்கு காப்பீட்டு தொகையை பட்டுவாடா செய்வதில் இழுபறி நிலை நீடிப்பதால் விவசாயிகள் நம்பிக்கை இழந்து வருகின்றனர்.
விவசாயிகளின் பணமும், கடின உழைப்பும், விளைச்சலும் இயற்கை சீற்றங்களால் பயனற்றுப் போய்விடக்கூடாது என்ற நோக்கத்துடன் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தானியங்கள், சிறு தானியங்கள், நெல், கேழ்வரகு, சோளம், கம்பு, நிலக்கடலை, எள், உளுந்து, கொள்ளு, பருத்தி, கரும்பு, உருளைக்கிழங்கு, வாழை, மிளகாய், மரவள்ளி, பூண்டு, இஞ்சி, அண்ணாசிப்பழம், மஞ்சள், வெங்காயம் ஆகிய பயிர்களை காப்பீடு செய்யலாம்.

இந்த பயிர்களுக்கு வெள்ளம், வறட்சி, பூச்சிகள் மற்றும் நோய்களால் பாதிப்பு ஏற்பட்டு மகசூல் இழப்பை விவசாயிகள் சந்திக்கும் பட்சத்தில், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்திருந்த விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கப்படும்.

கடந்த ஆண்டில் கடலாடி தலுகாவை சேர்ந்த எஸ்.தரைக்குடி, உச்சிநத்தம், டி.எம்.கோட்டை, ஒச்சத்தேவன்கோட்டை, எம்.கரிசல்குளம் உள்ளிட்ட பகுதிகளில் மூன்று ஆயிரம் ஏக்கரில் மிளகாய் பயிர்கள் பயிரிடப்பட்டன.
இந்த பயிர்களுக்கு இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 40 லட்சம் ரூபாய் வரை பிரிமியமாக செலுத்தியுள்ளனர். இந்தநிலையில், இப்பகுதியில் பயிரிடப்பட்ட மிளகாய் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதால் கடந்த ஐந்து ஆண்டுகளில் சந்திக்காத மசூல் இழப்பை விவசாயிகள் சந்தித்துள்ளனர்.

இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய இழப்பீடு வழங்க வேண்டும். ஆனால், இழப்பீட்டு தொகையை பட்டுவாடா செய்ய மனமில்லாமல் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் விவசாயிகளை அலைக்கழிப்பு செய்கின்றனர். இந்த இழுபறி நிலை கடந்த சில மாதங்களாக தொடர்வதால் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் மீது விவசாயிகள் வைத்திருக்கும் நம்பிக்கை இழந்து வருகின்றனர்.

**நோயிலிருந்து பயிரை காப்பாற்ற விவசாயிகள் வேண்டுதல்**

திருவாடானை : நோயிலிருந்து பயிரை காப்பாற்ற, முத்துமாரியம்மன் கோயில் முன் நோய் தாக்கிய நெற்கதிர்களை கட்டி,விவசாயிகள் வேண்டுதல் செய்துள்ளனர்.

திருவாடானை ஒன்றியத்தில் இன்னும் சில நாட்களில் அறுவடை செய்ய தயார்நிலையில் இருக்கும் நெற்கதிர்களில், நெற்பழம் நோய் தாக்கி உள்ளது. இந் நோயால் விளைச்சல் பாதிக்கபடுவதோடு பெரும் நஷ்டம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அச்சங்குடியை சேர்ந்த விவசாயிகள் ,அங்குள்ள முத்துமாரியம்மன் கோயில் முன் , நோய் தாக்கிய நெற்கதிர்களை தொங்க விட்டு, நோய் தாக்குதலிருந்து காப்பாற்ற வேண்டுதலில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகள் கூறியதாவது: எங்கள் கிராமத்திற்கு ஒரு குறை என்றால் உடனடியாக முத்துமாரியம்மன் கோயில் முன் வேண்டுதல் வைப்போம். அக் குறைகள் உடனடியாக தீரும். அதே போல் விவசாயிகளுக்கு தற்போது பெரிய இழப்பு ஏற்படும் சூழ்நிலையில் நெற்பழம் நோய் தாக்கி உள்ளது. இதிலிருந்து காப்பாற்ற வேண்டுதல் வைத்துள்ளோம், என்றார்.

**வெள்ளை பொன்னி நெல் விலை குவிண்டாலுக்கு ரூ.150 உயர்வு**

மேட்டூர்: மேட்டூர் காவிரி கரையோரப்பகுதியில் சம்பா நெல் அறுவடை துவங்கி விட்டது. கடந்த ஆண்டை விட பொன்னி நெல் குவிண்டாலுக்கு 150 ரூபாய் கூடுதலாக கொடுத்து வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.மேட்டூர் காவிரி கரையோரம் மற்றும் மேட்டூர் கால்வாய் பாசன பகுதியில் உள்ள காவேரிகிராஸ், கோல்நாயக்கன்பட்டி, பூலாம்பட்டி, செக்கானூர் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் விவசாயிகள் சம்பா சாகுபடி செய்வது வழக்கம்.நடப்பாண்டில் பெரும்பாலான விவசாயிகள் வெள்ளை பொன்னி நெல்லையே அதிகம் சாகுபடி செய்தனர்.

இறுதி வரை சம்பா பாசனத்திற்கு தேவையான நீர் காவிரி மற்றும் மேட்டூர் கால்வாயில் திறந்து விடப்பட்டது. அதனால், காவிரி கரையோரப்பகுதியில் பொன்னி நெல் அமோகமாக விளைந்தது.தற்போது நெல் அறுவடை நடந்து வருகிறது. சேலம், கள்ளக்குறிச்சி, ஆத்தூர், திருவண்ணாமலை, சேலம் பகுதியில் இருந்து அரிசி வியாபாரிகள் மொத்தமாக நெல்லை கொள்முதல் செய்து தங்கள் பகுதிக்கு எடுத்து செல்கின்றனர். கடந்த ஆண்டு பொன்னி நெல் குவிண்டால் 1,300 ரூபாய்க்கு விற்றது.நடப்பாண்டில் ஒரு குவிண்டால் வெள்ளை பொன்னியை வியாபாரிகள் அதிகபட்சம் 1,450 ரூபாய்க்கு கொள்முதல் செய்கின்றனர். கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் பொன்னி நெல் விலை குவிண்டாலுக்கு 150 ரூபாய் அதிகரித்துள்ளது. எனவே, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பொன்னி அரிசி விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**கீரை, காய்கறிக்கு ரசாயன மருந்து தெளிப்பதால் ஆபத்து தர பரிசோதனை கூடம் அமைக்க கோரிக்கை**

ரசாயன மருந்து தெளித்த சில மணி நேரத்தில் அறுவடை செய்து விற்பனைக்கு வரும் காய்கறி, கீரைகளை வாங்கி சாப்பிடுவோருக்கு கடும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. உடல் ஆரோக்கியத்திற்கு உதவும் சைவ உணவுகளில் காய்கறி, கீரைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொரியல், அவியல், காய்கறி கூட்டு, சாம்பார் உள்ளிட்ட பல்வேறு வகைகளில் காய்கறி, கீரைகளை நாள்தோறும் பயன்படுகிறது. உடல் வளர்ச்சிக்கு காய்கறி, கீரைகள் பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

உடலில் சத்து குறைபாடு உள்ளவர்கள், கர்ப்பிணிகள், சர்க்கரை நோயாளிகள் ஆகியோர் நாள்தோறும் காய்கறி, கீரை சாப்பிடவேண்டும் என்று டாக்டர்கள் அறிவுறுத்தி வருகின்றனர். தற்போது காய்கறிகள், கீரைகள் விளைவிக்க அளவுக்கு அதிகமாக ரசாயன உரங்கள், பூச்சிகொல்லி மருந்துகள் யன்படுத்துவது அதிகரித்து வருகிறது. பூச்சிகொல்லி மருந்து தெளித்த சில மணி நேரத்தில் காய்கறிகள், கீரைகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. கத்திரிக்காய், தக்காளி, வெண்டை, காலி ஃப்ளவர், அவரைக்காய் உள்ளிட்ட காய்களின் உட்பகுதியில் புழுக்கள் புகுந்து விடுகின்றன. காய்களின் உட்பகுதிக்குள் ஊடுருவியுள்ள புழுக்களை கொல்ல வீரியம் நிறைந்த பூச்சிகொல்லி மருந்துகளை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். காய்கள், கீரைகள் நாள்தோறும் அறுவடை செய்ய வேண்டும். இல்லையெனில் அவை சமையலுக்கு பயன்படுத்த முடியாதபடி முதிர்ந்து விடும்.

அதனால், காய் மற்றும் கீரை வகைகள் நாள்தோறும் அறுவடை செய்யப்பட்டு உழவர் சந்தை, மார்க்கெட் உள்ளிட்ட இடங்களுக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. பூச்சிகொல்லி மருந்து அடிக்கப்பட்ட வயலில் இருக்கும் காய்கள் மற்றும் கீரைகளும் ரசாயன மருந்தின் மணம் மாறாத நிலையில் அறுவடை செய்யப்பட்டு, விற்பனைக்கு வருகிறது. அந்த காய்கறி மற்றும் கீரைகளை வாங்கி சமைக்கப்படுகிறது. அப்போது மருந்தின் வீரியம் முழுவதும் குறையாமல் உட்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. தண்டு கீரை, சிறு கீரை, அரை கீரை, புதினா, கொத்தமல்லி தளை, மிளகு தக்காளி கீரை (மணத்தக்காளி) உள்ளிட்ட கீரைகள் செழித்து வளர அளவுக்கு அதிகமான வகையில் யூரியா போடப்படுகிறது. கீரைகளின் தண்டு பகுதி, இலை பகுதியை பூச்சி, புழுக்கள் சேதபடுத்தாமல் இருக்க வீரியமான ரசாயன பூச்சிகொல்லி மருந்துகள் அடிக்கப்படுகின்றன. அவை சில மணி நேரத்தில் அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு வருகிறது. பூச்சி கொல்லி மருந்தின் மணம் வீசும் காய் மற்றும் கீரைகள் சாப்பிடும் மக்களுக்கு குடல் புண், வாயு தொல்லை, மூலம், மலச்சிக்கல் உள்ளிட்ட தொந்தரவுகள் ஏற்படும் பரிதாபம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர் ஒருவர் கூறியதாவது:வீரியம் குறைந்த பூச்சிகொல்லி மருந்துகளை அடித்தால், தற்போது இருக்கும் புழு, பூச்சிகள் இறப்பதில்லை. காய் மற்றும் கீரைகளுக்கு அதிக பவர் கொண்ட ரசாயன மருந்துகளை பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது.பூச்சி கொல்லி மருந்து அடிக்கப்பட்டு, மூன்று தினங்கள் கழித்து காய் மற்றும் கீரைகள் அறுவடை செய்து விற்கவேண்டும். தற்போது மருந்து அடிக்கப்பட்ட சில மணி நேரத்தில் அறுவடை செய்யப்பட்டு விற்கப்படுகிறது. பொதுமக்களின் ஆரோக்கியத்தை காப்பாற்ற விற்பனைக்கு வரும் காய் மற்றும் கீரைகள் தர பரிசோதனை செய்து விற்க அனுமதிக்க வேண்டும். அதற்கு உழவர் சந்தை, காய்கறி மார்க்கெட் உள்ளிட்ட இடங்களில் தர பரிசோதனை கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

- நமது சிறப்பு நிருபர்-

**தென்னை வணிக வளாக கலந்துரையாடல் கூட்டத்தில் வலியுறுத்தல்**

பட்டுக்கோட்டை : பட்டுக்கோட்டையில் அமைய உள்ள தென்னை வணிக வளாகம் குறித்து விவசாயிகளின் கருத்தைக் கேட்டு அதிகாரிகள் செயல்பட வேண்டுமே தவிர அதிகாரிகள் விருப்பப்படி அமைக்கக் கூடாது என்று கலந்துரையாடல் கூட்டத்தில் வலியுறுத்தினர். பட்டுக்கோட்டையில் ரூ.4 கோடியில் தென்னை வணிக வளாகம் அமைக்கப்பட உள்ளது. இது தொடர்பாக அங்கு உள்ள கிராம விரிவாக்க மையத்தில் தென்னை வணிக வளாகம் அமைப்பது பற்றி விவசாயிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. தஞ்சை கலெக்டர் சண்முகம் தலைமை வகித்து பேசியதாவது:பட்டுக்கோட்டை உக்கடை கிராமத்தில் 20 ஏக்கர் பரப்பளவில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் தென்னை வணிக வளாகம் அமைய உள்ளது. வரும்முன் காப்போம் என்பது போல விவசாயிகளிடம் கருத்தை கேட்டு அதன் பிறகு திட்டங்கள் அமல்படுத்தப்படும்.தென்னை வணிக வளாகத் தில் விவசாயிகள் தேங்காய் களை கொண்டு வந்து உடைத்து காயவைத்து கொப்பரையாக மாற்றி அதை அங்கேயே விற்று உடனே பணத்தைப் பெற்று செல்லும் வழிமுறைகள் செய்யப்படவேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கம். மழைக்காலங்களில் விவசாயிகள் எப்படி கொப்பரை தயார் செய்வது என விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

இங்கு தேங்காய் அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளின் கருத்தைக் கேட்டு அதை அரசுக்கு அனுப்பி வைத்து அதன்படி விவசாயிகளுக்கு என்னன்ன செய்ய முடியுமோ அதன்படி செய்து கொடுக்க தயாராக உள்ளோம்.இவ்வாறு அவர் பேசினார்.எம்.எல்.ஏ., ரெங்கராஜன்: தென்னை உற்பத்தியாளர்களுக்கு கொப்பரை தயார் செய்யும் களம் பெரிய அளவில் வேண்டும். கொப்பரை தயாரிக்க அதிநவீன உயர்ந்த ரக மிஷின், தனியார் இயந்திரங்கள் மூலம் கொப்பரை தயார் செய்வதற்கு அனுமதி வேண்டும். விவசாயிகளின் கருத்தைக் கேட்டு வளாகத்தின் அமைப்பை அதிகாரிகள் கொண்டுவர வேண்டும். அதிகாரிகளே வடிவத்தை கொண்டு வந்திருப்பது உகந்ததல்ல. மேலும் முக்கியமாக 1 கோடி ரூபாய் செலவில் களம் அமையவேண்டும் என்றார். நிலவள வங்கி முன்னாள் தலைவர் வீரசேனன்: சென்னையிலிருந்து வந்துள்ள அதிகாரிகள் இங்குள்ள விவசாயிகளின் கருத்தைக் கேட்டு வணிக வளாகம் அமைக்க வேண்டும். அதை அவர்கள் செய்யாமல் அவர்களே ஒரு செயல்வடிவம் கொண்டு

வந்திருப்பது ஏற்புடையதல்ல. கொப்பரை தயாரிக்க நவீன, அதிநவீன இயந்திரங்கள் வேண் டும். கொப்பரைகளை காயவைக்க களம் வேண்டும். அவற்றை அங்கேயே விற்பதற்குரிய பணம் பெற்று செல்ல வழி வகுக்க வேண்டும். பட்டுக்கோட்டை தென்னை வளர்ப்போர் சங்கத் தலைவர் கலைச்செல்வன்: தமிழ்நாட்டிலேயே கொப்பரை உருவாக்கும் திட்டம் பட்டுக்கோட்டையில் உருவாக்கியிருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. கொப்பரை உற்பத்தி மட்டும் செய்யாமல் அதனைச் சார்ந்த இளநீர், வெர்ஜின் தேங்காய் எண்ணெய் மற்றும் இதுபோன்ற மதிப்புக் கூட்டப்பட்ட தென்னை உற்பத்தி பொருட்கள் தயார் செய்து விற்பனை செய்ய இடம் ஒதுக்கித் தரவேண்டும். சிறிய விவசாயிகள் கொப்பரை தயார் செய்ய முடியாது. அந்தக் கொப்பரையை தயார் செய்து கொடுப்பதற்கு கூட்டுறவு சங்கங் கள் தயாராக உள்ளது. அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றார். குருவிக்கரம்பை பழனிவேலு, துரைமாணிக்கம், மற்றும் பலர் பேசினர். தஞ்சை மாவட்ட வேளாண் விற்பனைக் குழுத் தலைவர் செல்வம் வரவேற்றார். வேளாண் இணை இயக்குனர் வேலாயுதம், துணை இயக்குனர் பாலசுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட விற்பனைக்குழு செயலாளர் மனோகரன் நன்றி கூறினார்.

**உர உற்பத்தி நிறுவனங்கள் கவனத்திற்கு**

தேனி: தேனி மாவட்டத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்கள் உயிர் உரம் உற்பத்தி, மண்புழு உரம் தயாரித்தல், நகர கழிவிலிருந்து உரம் தயாரித்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.இனி வரும் காலங்களில் உரிய உரிமம் பெற்று இந்த உரம் தயாரிப்பு மற்றும் வினியோகம் செய்ய வேண்டும் என மத்திய, மாநில அரசுகள் உத்தரவிட்டுள்ளன. எனவே மேற்கண்ட உர உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் வேளாண் இணை இயக்குனர் மூலம் உரிமம் பெற வேண்டும்.

**பழக்கன்று விற்பனையாளர்கள் கவனத்துக்கு...**

விதை ஆய்வு துணை இயக்குனர் ராஜசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:திருச்சி பெரம்பலூர், மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள தென்னங்கன்றுகள், பழக்கன்றுகள் விற்பனை செய்பவர்கள் 1983 ம் ஆண்டு விதை கட்டுப்பாட்டு ஆணையைக் கடைபிடிக்க வேண்டும். அதன்படி இருப்புப்பதிவேடு, கொள்முதல் பட்டியல்களை முறையாக பராமரிக்க வேண்டும். விற்பனை பட்டியலில் கன்றுகளின் பெயர், ரகம், மற்றும் குவியல் எண் ஆகியவற்றை குறிப்பிட்டு விவசாயிகள் கையொப்பம் பெற வேண்டும்.மேலும் இவற்றை விற்பனை செய்வதற்காக அவசியம் விதை விற்பனை உரிமம் பெற வேண்டும். மேலும் ஒவ்வொருமாதம் 5ம் தேதிக்குள் இருப்பு, வினியோக அறிக்கையை திருச்சி விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். உரிமைபெறாமல் கன்றுகள் விற்பனை செய்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாதூர் கால்நடை மருத்துவமனை செயல்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?**

உளுந்தூர்பேட்டை : பாதூர் கால்நடை மருத் துவமனையை செயல்பட அதிகாரிகள் நட வடிக்கை எடுக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை அடுத்த பாதூர் கிராமத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. இவைகளின் மருத்துவ வசதிக்காக ரயில்வே கேட் அருகில் கடந்த 2004ல் கால்நடை மருத்துவமனை கட்டப்பட்டது. இந்த மருத்துவமனையை திறப்பு விழா செய்யாததால் இதனை சுற்றி முட்கள் முளைத் துள்ளது. அரசு செலவு செய்து கட் டப்பட்ட இந்த கட்டடம் தற்போது பயன் படாமல் காட்சிப்பொருளாக உள் ளது. மேலும் பொதுமக்கள் தங்களது கால்நடைகளை சிசிக்சைக்காக உளுந் தூர்பேட்டை மற்றும் திருநாவலூர் பகுதிக்கு ஓட் டிச்செல்வற்கு

மிகுந்த சிரமம் அடைகின்றனர். எனவே கால்நடைதுறை அதிகாரிகள் பாதூர் கால்நடை மருத்துவமனை செயல்பட நட வடிக்கை எடுக்க வேண்டும்.

**விவசாயிகள் சங்க கூட்டம்**

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை அருகே பந்தல்குடியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க கூட்டம் நடந்தது. துணை தலைவர் சீனிவாசன் தலைமை வகித்தார். புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவராக குருசாமி, துணை தலைவர்களாக சத்தியசீலன், சீனிவாசன், செயலர் கனகராஜ், பொருளாளர் கிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட செயலர் சீனிவாசன், தாலுகா செயலர் சண்முகவேல் சிறப்புரையாற்றினர். உறுப்பினர் கருப்பசாமி நன்றி கூறினார்.

**மக்காச்சோளம் விலை சரிவு : விவசாயிகள் சோகம்**

பல்லடம் : மக்காச்சோளம் கொள்முதல் விலை மூட்டைக்கு 20 ரூபாய் சரிவு, விவசாயிகளுக்கு சோகத்தையும், பண்ணையாளர்களுக்கு மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

பல்லடம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் 5,000க்கும் மேற்பட்ட கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. கோழித்தீவனம் தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களில் மக்காச் சோளத்தின் சதவீதம் 55 முதல் 60 சதவீதம். பல்லடம் பகுதியில் உள்ள கறிக்கோழிகளுக்கு தீவனம் தயாரிக்க, பல்லடம், உடுமலை மற்றும் பொங்கலூர் சுற்றியுள்ள பகுதிகளில் விளையும் மக்காச் சோளம் பயன்படுத்தப்படுகிறது.
கடந்த மாதம், கர்நாடகத்தில் இருந்து பல்லடம் பகுதிக்கு மக்காச்சோளம் வரத்து குறைவாக காணப் பட்டது. சில நாட்களாக, பல்லடம் பகுதிக்கு கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வரும் மக்காச் சோளம் வரத்து அதிகரித்துள்ளது.

இதன் எதிரொலியாக, உள்ளூர் மக்காச்சோளம் விலை மூட்டை ஒன்றுக்கு 20 ரூபாய் சரிந்துள்ளது; தற்போது, ஒரு மூட்டை மக்காச்சோளம் விலை 850 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த விலை விவசாயிகளுக்கு மோசம் இல்லை என்றாலும் கூட, ஐந்து நாட்களில் ஒரு மூட்டைக்கு 20 ரூபாய் சரிவு, பல்லடம் பகுதியில் உள்ள மக்காச் சோளம் விவசாயிகளை வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது; கறிக்கோழி பண்ணையாளர்களுக்கு மகிழ்ச்சி அளித்துள்ளது.

**போலி நாற்று: விவசாயிகளுக்கு விதை ஆய்வு துறை எச்சரிக்கை**

உடுமலை : "போலி நாற்றுக்களை வாங்கி, விவசாயிகள் ஏமாறவேண்டாம்' என, விதை ஆய்வு துறை எச்சரித்துள்ளது.

விதை ஆய்வாளர் வெங்கடாசலம் வெளியிட்டுள்ள அறிக்கை: உடுமலை மற்றும் சுற்றுப்பகுதியில் தென்னை மற்றும் காய்கறி நாற்றுப்பண்ணைகள் உள்ளன. விவசாயிகள், தங்களுக்கு தேவையான நாற்றுக்களை நாற்றுப்பண்ணைகளில் இருந்து வாங்கி, சாகுபடி செய்கின்றனர். இந்த நாற்றுக்களை வாங்கும் போது, கோவை விதை ஆய்வு இயக்குனர் உரிமம் பெற்றுள்ளனரா என்பதை அறிந்து வாங்கவும். மேலும், விற்பனை பட்டியலில் வாங்குபவர் மற்றும் விற்பவர் கையெழுத்துடன் கேட்டு வாங்கவும். தக்காளி போன்ற வீரிய காய்கறிகள் வாங்கும்போது, ஒட்டுக்கட்டி விளைவிக்கப்பட்ட செடியின் பழங்களில் இருந்துதான் விதைகள் எடுத்து, நாற்றுக்கள் தயார் செய்திருக்க வேண்டும். பண்ணைகளில் விளைவிக்கப்பட்ட இரண்டாம் தலைமுறை பழங்களில் இருந்து விதை எடுத்து, நாற்றுக்கள் தயார் செய்கின்றனர்.
இவ்வாறு தயாராகும் போலியான நாற்றுக்கள் குறைந்த விலைக்கு, அதிகளவு விற்பனை செய்யப்படுகிறது.

எனவே, விவசாயிகள் உரிமம் பெற்ற நாற்றுப்பண்ணைகளில் இருந்து தரமான நாற்றுக்களை வாங்கி பயனடையவும். விதை விற்பனை உரிமம் பெறாமல், நாற்றங்கால் அமைத்து விற்பனை செய்தால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, விதை ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

தினகரன்

**சந்தைக்கு வருமா பி.டி. கத்தரிக்காய்?**

பதிவு செய்த நாள் 1/25/2010 12:17:50 AM



சென்னை: வேளாண் ஆராய்ச்சியின் பரிணாம வளர்ச்சியாக கருதப்படும் பி.டி. கத்தரிக்காய் வேண்டுமா, வேண்டாமா என்ற சர்ச்சை தேசிய விவாதமாக மாறியிருக்கிறது. விவசாயிகள் மத்தியில் எதிர்ப்பையும், வேளாண் விஞ்ஞானிகள் மத்தியில் ஆதரவையும் பெற்றுள்ளதால், இந்த கத்தரிக்காய் விவகாரம் காரசாரமாகி இருக்கிறது. 'கத்தரிக்காய் முற்றினால் கடைத்தெருவுக்கு வரும்' என்பது நம்மூர் பழமொழி. ஆனால், இந்த விஷயத்தில் சர்ச்சை முற்றி முடிவுக்கு வந்தால்தான் இந்த நவீன கத்தரிக்காய் கடைத்தெருவுக்கு வரும் என்பது உறுதி.

'பேஸ்லெஸ் துரிஞ்சீயஸ்' என்ற மரபணுவை கொண்டு, உயிர் தொழில்நுட்ப அடிப்படையில் கத்தரிக்காயில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் பலன்தான் பி.டி.கத்தரிக்காய். அமெரிக்காவில் முதன்முதலாக இந்த ஆராய்ச்சி மூலம் பருத்தி, மக்காச்சோளம், சோயா மொச்சை போன்றவற்றில் புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பி.டி.பருத்தியில் காய்ப்புழுக்கள் கட்டுப்படுத்தப்பட்டு, மகசூல் பன்மடங்கு பெருகியது.

இந்தியாவில் பி.டி.பருத்திக்கான ஆராய்ச்சி 1996ம் ஆண்டில் தொடங்கியபோதே எதிர்ப்பும் கிளம்பியது. ஆனாலும், மத்திய அரசு அனுமதி அளித்தது. இந்த ஆராயச்சியின் முடிவை, மத்திய அரசின் மரபணு தொழில்நுட்ப அங்கீகாரக் குழு ஆய்வு செய்தது. எந்த சுகாதாரக் கேடும் இல்லை, ஆடு மாடுகள் சாகவில்லை என்பதை உறுதி செய்தது. பின்னர் 2002ல் வர்த்தக பயன்பாட்டிற்கு அனுமதி தந்தது.

பழைய பருத்தி ரகத்தை பயிரிட்டால், காய்ப்புழுக்களை கட்டுப்படுத்த 10 முதல் 12 தடவை பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்க வேண்டும். பி.டி.ரகத்தில், 2 முறை மருந்து அடித்தால் போதும். விவசாயிகளுக்கு செலவு மிச்சம். பழைய ரக பருத்தி ஆறு முறை வெடிக்கும். உடனடியாக அறுவடை செய்யாவிட்டால் வீணாகி விடும். பி.டி.ரகத்திற்கு அந்த பிரச்னை இல்லை. ஒரே முறைதான் வெடிக்கும். அறுவடை எளிதாக முடிந்து விடும். இந்த நன்மைகள் காரணமாக, 7 ஆண்டுகளில் ஒட்டுமொத்த பருத்தி சாகுபடி பகுதிகளில் 80 சதவீதத்தை பி.டி.பருத்தி பிடித்துக் கொண்டது.

இதுகுறித்து தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி கூறுகையில், '2002க்கு முன்னர் இந்தியாவின் தேவை 24 மில்லியன் பேல் பருத்தி. ஆனால், 16 மில்லியன் பேல்கள்தான் உற்பத்தி செய்யப்பட்டன. மீதியை இறக்குமதி செய்தோம். பி.டி.ரகத்திற்கு மாறிய பின்னர், 32 மில்லியன் பேல் உற்பத்தி செய்கிறோம். தேவைக்கு போக மீதியை ஏற்றுமதி செய்கிறோம். இதுதான் அறிவியல் வளர்ச்சியின் பயன். விவசாயிகள் இதை முழுமையாக ஏற்றுக் கொண்டதும் முக்கிய காரணம். அதிலும், பொள்ளாச்சி அருகே வடக்கிபாளையம் கிராமத்து

விவசாயிகள் மழையை நம்பி மானாவாரி சாகுபடி செய்து, ஏக்கருக்கு 12 குவிண்டால் மகசூல் பார்க்கின்றனர்' என்றார்.

இந்த ஆராய்ச்சியின் அடுத்த கட்டம்தான் கத்தரிக்காய். நாட்டில் அதிகம் பேர் பயன்படுத்தக் கூடியது. கத்தரிக்காய் மகசூலுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்தவை இரு வகையான காய்ப்புழுக்கள். கத்தரிக்காயில் கிட்டத்தட்ட 70 சதவீதம் அளவுக்கு இந்த நோய் தாக்குதலால் சேதம் ஏற்பட்டது. மருந்து அடித்தாலும் இப்புழுக்கள் சாவதில்லை. அப்படியே செத்தாலும் கத்தரிக்காயில் விழும் சொத்தை நீங்குவதில்லை. இந்த குறைபாட்டை போக்க வந்ததுதான் பி.டி.கத்தரிக்காய். மரபணு மாற்றம் செய்யப்பட்டது.

அதற்கான ஆராய்ச்சியில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் ஈடுபட்டு, நான்கு பி.டி.ரக கத்தரிக்காய்களை கண்டுபிடித்தது.இது பற்றி துணைவேந்தர் முருகேசபூபதி கூறுகையில், 'காய்ப்புழுக்களை கட்டுப்படுத்தக்கூடிய மரபணுக்களை கொண்டது இந்த ரகம். கோவை, மதுரை, கிள்ளிகுளம், பாலூர் ஆகிய இடங்களில் இந்த ரகங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இதனால் எந்த பக்க விளைவுகளும் இல்லை என்பதை ஆய்வு மூலம் உறுதி செய்து, மத்திய அரசின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால், பொதுமக்கள் கருத்து கேட்டறிந்த பின்னர் வெளியிடலாம் என்று வைத்துள்ளோம். மக்கள் விருப்பத்தின் அடிப்படையில் இவை வர்த்தக பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்' என்றார்.

காய்ப்புழுக்கள் எப்படி உருவாகும்?

கத்தரிக்காய் செடிகள் காய்விட்டதும் அதன்மீது வண்ணத்துப்பூச்சிகள் முட்டையிடுகின்றன. அதிலிருந்து 3 நாளுக்கு பிறகு, லார்வா என்ற புழு உருவாகும். உருவான 4 மணி நேரத்திற்குள் அதை மருந்தடித்து அழிக்க வேண்டும். இல்லையேல் காய்க்குள் புகுந்துவிடும். அப்புறம் அழிக்க முடியாது. காய்க்குள் ஊடுருவக்கூடிய மருந்து உள்ளது. அதை அடித்தால் புழு சாகலாம். ஆனால், சொத்தை ஏற்படுவதை தவிர்க்க முடியாது.
பி.டி.ரக கத்தரிக்காயில் இந்த புழு உள்ளே போனதும் இறந்து விடும். அதற்கான மரபணு கத்தரிக்காய்க்குள் இருக்கிறது. அந்த மரபணு புழுக்களுக்குதான் விஷமாகுமே தவிர, மனிதருக்கு அல்ல. ஏனெனில் எலி, பூனை போன்ற பிராணிகளிடம் சோதனை நடத்திய பின்னர்தான் அந்த மரபணு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்கின்றனர் வேளாண் விஞ்ஞானிகள்.

கத்தரிக்காய் உற்பத்தி

தமிழகத்தில் 7676 ஹெக்டேர் பரப்பில் கத்தரிக்காய் பயிரிடப்படுகிறது. 82,049 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு 10.6 டன் மகசூல் கிடைக்கும். இதில் 70 சதவீதம் அளவுக்கு காய்ப்புழுக்களால் சேதம் அடைகின்றன. தமிழகத்தில் 1.2 லட்சம் ஹெக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இதில் 90 ஆயிரம் ஹெக்டேர் வரை பி.டி.ரக பருத்திதான் பயிரிடப்படுகிறது என்பது வேளாண் பல்கலை. கூறும் புள்ளிவிவரம்.

விவசாயிகள் எதிர்ப்பு ஏன்?

பி.டி.ரகம் எனும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்க்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அதுபற்றி, தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அரச்சலூர் செல்வம் கூறியதாவது:

பி.டி.ரகம் என்பது முற்றிலும் செயற்கையானது. விளைச்சலை அதிகப்படுத்தக் கூடிய ரகமும் அல்ல. கத்தரிக்காயை தாக்கக் கூடிய பூச்சிகள் என்பது பலவகை. அதில் ஒரு வகை பூச்சிகளை மட்டுமே இந்த மரபணு

கட்டுப்படுத்துகிறது. இதனால் மற்ற பூச்சிகளின் வளர்ச்சி அதிகரிக்கிறது. அதை கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்து தெளித்துதான் ஆக வேண்டும்.

காய்ப்புழுக்களை கட்டுப்படுத்த மரபணு மாற்றம்தான் அவசியம் என்றில்லை. ஏற்கனவே வேளாண் பல்கலைக்கழகம் பரிந்துரைத்துள்ள ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் உள்ளன. இந்த முறைப்படியும், இயற்கை விவசாய முறைப்படியும் ஆந்திராவில் 18 மாவட்டங்களில் பயிர் செய்யப்படுகிறது. பருத்தி, கத்தரி, நெல் என 35 வகை பயிர்களை பயிரிடுகின்றனர். பயிரிட்டுள்ள பரப்பில் 10 சதவீத பரப்பில் பூச்சிகளை கட்டுப்படுத்தியுள்ளனர். எனவே, மாற்று வழி இல்லை என்பதல்ல.

பி.டி. தொழில்நுட்பம் முழுமையான சோதனைக்கு உட்பட்டதல்ல. வெறும் 90 நாட்கள்தான் சோதனை செய்துள்ளனர். எனவே, இது மரபணு மாற்றமல்ல; மரபணு திணிப்பு தொழில்நுட்பம். இதன் பாதுகாப்பு தன்மை பற்றி யாருக்குமே தெரியாது. வெளிநாடுகளில் நடத்தப்பட்ட சோதனையில் இதனால் மலட்டுத்தன்மை அதிகரிப்பதாகவும், நோய் எதிர்ப்பு சக்தி குறைவதாகவும் கண்டுபிடித்துள்ளனர். விலங்குகளுக்கு நடத்தப்பட்ட ஆய்வில் உள்ளுறுப்புகளில் பாதிப்பு ஏற்படுவதையும் கண்டுபிடித்துள்ளனர். மனிதர்களுக்கு என்ன பாதிப்பு வருமோ?

இந்தியாவில் எந்த மூலையிலும் விவசாயிகள் இதை கேட்கவில்லை. கத்தரிக்காயை விட கரும்பு, தென்னை போன்ற பயிர்கள்தான் அதிக நோய்த்தாக்குதலுக்கு உள்ளாகின்றன. அதற்கு மாற்று வழி காணலாம். பருத்தி, கத்தரிக்காய் ஏற்கனவே அதிகமாக விளையக்கூடிய பொருள். அதிக விளைச்சல் தராத பயிர்களுக்கு மாற்று பயிர் கண்டுபிடித்தால் ஏற்கலாம்.

பி.டி. ரகம் என்பதால் பருத்தி அதிக விளைச்சலை தரவில்லை. ஒட்டு ரகத்திற்கே உரிய பலன்தான் அது. எல்லா விவசாயிகளும் பி.டி.பருத்திக்கு மாறியதற்கு காரணம், சாதாரண விதைகள் கிடைப்பதில்லை என்பதுதான். பி.டி. ரகத்தினால் பயிர்களுக்கு புதுவித நோய்கள் உருவாகின்றன.
மக்கள் கருத்து கேட்பு கூட்டம் இந்தியாவில் 7 இடங்களில்தான் நடத்தப்படுகின்றன. இதுவரை, கொல்கத்தா, புவனேஸ்வர், அகமதாபாத் ஆகிய இடங்களில் நடந்த கூட்டங்களில் எதிர்ப்புதான் அதிகம். மேற்கு வங்கம், ஒரிசா, பீகார், மத்திய பிரதேசம், கேரளா, கர்நாடகா, சட்டீஸ்கர் போன்ற மாநிலங்களில் பி.டி.கத்தரிக்காய்க்கு தடை விதித்துள்ளனர். இதில், மேற்கு வங்கம், பீகார், ஒரிசாவில்தான் 75 சதவீத கத்தரிக்காய் விளைகிறது. இவ்வாறு அரச்சலூர் செல்வம் தெரிவித்தார்.

### பருப்பு விலை குறைய நடவடிக்கை முதல்வர் கருணாநிதி அறிக்கை

பதிவு செய்த நாள் 1/25/2010 12:44:02 AM



சென்னை: முதல்வர் கருணாநிதி நேற்று வெளியிட்ட கேள்வி&பதில் அறிக்கை: தற்போது, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தக் கடன் சுமை ரூ.90 ஆயிரம் கோடி என்றும், தமிழ்நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் ரூ.15

ஆயிரம் கடனுடன் பிறக்கிறது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறாரே, தமிழக அரசு மட்டும்தான் இந்த அளவுக்கு கடன் பெற்றுள்ளதா, மற்ற மாநில அரசுகள் எந்தக் கடனும் பெறவில்லையா?
தற்போது எந்த அரசாக இருந்தாலும், கடன் வாங்காமல் திறம்பட ஆட்சி நடத்த முடியாது.

மக்களுக்கு அவசியமான திட்டங்களை அதிகத் தொகை செலவழித்து நிறைவேற்ற திட்டமிடும்போது, கடன் வாங்காமல் அவற்றை எந்த அரசாலும் நிறைவேற்ற முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா சொன்ன புள்ளி விவரம் சரியல்ல. இன்றைய நிலையில் தமிழக அரசுக்கு உள்ள மொத்தக் கடன் சுமை ரூ.74,858 கோடி. ஆந்திராவின் மொத்தக் கடன் சுமை ரூ.92,465 கோடி. மகாராஷ்டிரா ரூ.1,61,276 கோடி.

தனி நபர் கடன் சுமை என எடுத்து கொண்டால் கூட, தமிழகத்தில் ரூ.12,054. ஆந்திராவில் ரூ.12,215. மகாராஷ்டிராவில் ரூ.16,661. கர்நாடகாவில் ரூ.13,375. கேரளாவில்கூட ரூ.20,293. அதிமுக ஆட்சிக்காலத்திலே கூட தனிநபர் கடன்சுமை ரூ.9,267என்ற அளவுக்கு இருந்தது. தற்போது ரூ.12054 என்று உயர்ந்துள்ளது. எனவே, அவரது ஆட்சிக் காலத்தில் தனிநபர் கடன் சுமையே கிடையாது என்றோ, இப்போது தான் தனிநபர் கடன் சுமை தமிழகத்திலே ஏற்பட்டுவிட்டது என்றோ நினைக்கத் தேவையில்லை. இதையெல்லாம் விட, மத்திய அரசின் இன்றைய கடன் சுமை ரூ.31,35,375 கோடி. மத்திய அரசின் தனிநபர் கடன் சுமை ரூ.30,528. எனவே, தமிழக அரசு நிதி பிரச்னை எந்தவிதமான குழப்பத்திலும் இல்லை.

தமிழக அரசின் இன்றைய கடன் சுமையான ரூ.74,858 கோடி என்பது கூட ஏதோ கடந்த 4 ஆண்டு கால திமுக ஆட்சியில் வாங்கியது அல்ல. 1996&2001ம் ஆண்டில் திமுக ஆட்சியின் இறுதியில், 31&3&2001ல் ரூ.28,685 கோடியாக தமிழக அரசின் கடன் பொறுப்புகள் இருந்தன. இதன்பின், அதிமுக ஆட்சி நடத்திய 2001&2006ம் ஆண்டு கால இறுதியில், 31&3&2006ல் மாநில அரசின் கடன் பொறுப்புகள் ரூ.57,457 கோடியாக உயர்ந்தது. சுருங்கக் கூறின், அதிமுக ஆட்சி இறுதியில் அரசின் கடன் பொறுப்புகள் திமுக ஆட்சி விட்டு சென்றதைவிட 2 மடங்காக உயர்ந்தது.

அரசு கடனாக திரட்டும் நிதி ஆதாரங்கள் அரசின் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தவும், கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, ராமநாதபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் போன்றவற்றை கடன் பெறாமல் நிறைவேற்ற முடியாது. சேலத்தில் அதிமுகவினர் சிலர் திமுகவுக்கு வாக்களித்ததற்காக ஜெயலலிதா நடவடிக்கை எடுத்திருப்பதாக செய்தி வந்துள்ளது, உண்மைதானா?

சேலம் மாவட்டம், அயோத்தியாப் பட்டினம் ஊராட்சி ஒன்றிய தலைவராக பாமக வைச் சேர்ந்த ஒருவர் இருக்கிறார். அந்த ஒன்றியத்தின் மொத்த உறுப்பினர்கள் 19 பேர்தான். அவர்களில் திமுக 10 பேர், காங்கிரஸ் 3 பேர், அதிமுக 4 பேர், பாமக 2 பேர். ஊராட்சி ஒன்றியத் தேர்தலின்போது, திமுகவும், பாமகவும் தோழமைக் கட்சிகளாக இருந்த காரணத்தால், திமுகவினர் 10 பேர் இருந்தபோதிலும், 2 பேரை மட்டுமே கொண்ட பாமகவைச் சேர்ந்த ஒருவரை ஊராட்சி ஒன்றியத் தலைவராக வெற்றிபெறச் செய்ய திமுக உதவியது. ஆனால், அந்த பாமக தலைவர் பல தவறுகள் செய்ததால், அவர் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது 22&1&2010ல் வாக்கெடுப்பு நடந்தது. சட்டவிதிப்படி ஊராட்சி ஒன்றிய தலைவர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற வேண்டுமென்றால், மொத்த உறுப்பினர்களில் 80 சதவீதம் பேர் (குறைந்தபட்சம் 16 உறுப்பினர்) தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தால் நிறைவேறும்.

அந்த ஒன்றியத்தில் திமுக, காங்கிரசைச் சேர்ந்த 13 பேர் மட்டுமே வாக்களித்தால் தீர்மானம் வெற்றி பெற்றிருக்காது. இந்தச் சூழ்நிலையில் அதிமுகவின் தலைமை, அதிமுகவின் 4 உறுப்பினர்களும் பாமகவுக்கு ஆதரவாக வாக்களித்தால், திமுக, காங்கிரஸ் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோற்கடித்து விடலாம் என்று கருதினர். அந்தக் கட்சியின் முன்னணித் தலைவர் ஒருவர் மூலமாக முயற்சித்து, 4 அதிமுக

உறுப்பினர்களையும் பாமகவுக்கு ஆதரவாக தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்க தீவிரமாக ஈடுபட்டனர். ஆனால், அதிமுக உறுப்பினர்களில் 3 பேர், தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்து அதை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். இவ்வாறு கட்சிக் கட்டுப்பாட்டை மீறி நடந்த அதிமுகவினர் மீது அந்தக் கட்சியின் தலைமை நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழக அரசு மதிய உணவுத் திட்டத்தை சிறப்பாக நடத்தி வருவதாக ம.பி. முதல்வர் கூறியிருக்கிறாரே?
தமிழகத்துக்கு வந்த மத்தியப் பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுகான், 'தமிழக அரசு இந்தியாவுக்கே முன்னோடியாக மதிய சத்துணவு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துகிறது. மத்திய பிரதேசத்தில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து ஆலோசித்து வருகிறோம்' என மனந்திறந்து பாராட்டியிருக்கிறார். மேலும், தமிழ்நாட்டில் மீனவர்களுக்கு மானிய விலையில் டீசல், ரூ.80 கோடி கடன் தள்ளுபடி செய்துள்ளதையும் பாராட்டியிருக்கிறார். இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். பருப்பு விலை சரிந்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது. விலைவாசி உயர்வைப் பற்றி வீண் ஆர்ப்பாட்டம் செய்பவர்களால்
இதை தாங்கிக் கொள்ள முடியாதே?

கடந்த மாதத் தொடக்கத்தில் 100 கிலோ துவரம் பருப்பு மூட்டை ரூ.9 ஆயிரத்துக்கு விற்றது. 23&1&2010ல் விலை ரூ.7 ஆயிரமாக குறைந்துள்ளது. மூட்டைக்கு ரூ.2 ஆயிரம் விலை சரிந்துள்ளது. இதேபோல், 2ம் ரக துவரம் பருப்பு விலை மூட்டை ரூ.7000ல் இருந்து ரூ.6500 ஆகவும், தான்சானியா துவரம் பருப்பு ரூ.6700ல் இருந்து ரூ.5500 ஆகவும், மியான்மர் துவரம் பருப்பு ரூ.6000ல் இருந்து ரூ.5500 ஆகவும் குறைந்துள்ளது.
உளுத்தம் பருப்பு விலை மூட்டைக்கு ரூ.7000ல் இருந்து ரூ.6800 ஆகவும், முதல் ரக பாசிப்பருப்பு ரூ.8000ல் இருந்து ரூ.7800 ஆகவும் விலை குறைந்துள்ளது. மொத்த விலை குறைந்தபோதிலும், சில்லரை விற்பனையில் விலை குறையவில்லை என கூறப்படுகிறது. மொத்த விலையைத் தொடர்ந்து சில்லரை விலையையும் குறைக்க உணவுத் துறை உடனடியாக கவனம் செலுத்திடும்.

## டெல்லியில் கிலோ ரூ.41 சர்க்கரை விலை கட்டுப்படுத்த இறக்குமதி சலுகை நீட்டிப்பு

பதிவு செய்த நாள் 1/25/2010 1:17:34 AM



புதுடெல்லி: சர்க்கரை விலையை கட்டுப்படுத்த இறக்குமதி சலுகை நீட்டிக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. சர்க்கரை விலை ஒரு கிலோவுக்கு ரூ.50 ஆக உயர்ந்தது. இதைக் கட்டுப் படுத்த பல நடவடிக்கைகளை கடந்த 13ம் தேதி மத்திய உணவு அமைச்சர் சரத் பவார் அறிவித்தார்.
அதைத் தொடர்ந்து விலையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு என்ன என்ற விவரங்களை மத்திய அரசு திரட்டியது. அதன்படி டெல்லி, புவனேஸ்வரம் ஆகிய இரண்டு நகரங்கள் நீங்கலாக நாடெங்கும் உள்ள மற்ற நகரங்களில் சில்லரைக் கடைகளில் சர்க்கரை விலை ரூ.10 வரை உயர்ந்துள்ளது.

அதே சமயம்¢ டெல்லி, மும்பை உட்பட முக்கிய நகரங்களில் உள்ள மொத்த விற்பனை சந்தைகளில் சர்க்கரை விலை இறங்கு பாதையில் திரும்பி உள்ளது. டெல்லியில் ரூ.3.50 குறைந்து ஒரு கிலோ ரூ.41க்கும் மும்பையில் ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைந்து ரூ.40க்கும் விற்கப்படுகிறது.

விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அறிவித்த உணவு அமைச்சர் சரத் பவார், இந்த நடவடிக்கைகளின் பலன் மார்க்கெட்டில் பிரதிபலிக்க குறைந்த பட்சம் 15 நாள்களாகும் எனக் கூறியுள்ளார்.

எந்த வரியும் இல்லாமல் டிசம்பர் இறுதிவரை சர்க்கரை இறக்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சர்க்கரை விலை உயர்ந்ததால் அந்தச் சலுகைகளை மார்ச் மாதம் இறுதி வரை நீடிப்பதாக அரசு அறிவித்துள்ளது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை வகைகளை இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் பதப்படுத்திக் கொள்ளவும் இப்பொழுது அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உள்நாட்டில் விற்பனைக்கு கிடைக்கும் சர்க்கரையின் அளவு அதிகரிக்கும். விலை கட்டுப்படுத் தப்படும் என அரசு அறிவித்துள்ளது.

---

## மொத்த விலை குறைவை தொடர்ந்து

## பருப்பு சில்லரை விலையை குறைக்க உடனடியாக கவனம் செலுத்தப்படும்

## கருணாநிதி அறிவிப்பு

*சென்னை, ஜன.25–*
*மொத்த விலை குறைவை தொடர்ந்து, பருப்பு சில்லரை விலையையும் குறைக்க உணவுத்துறை உடனடியாக கவனம் செலுத்திடும் என்று முதல்–அமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.*
*இதுதொடர்பாக முதல்–அமைச்சர் கருணாநிதி வெளியிட்டுள்ள கேள்வி–பதில் வடிவிலான அறிக்கையில் கூறியிருப்பதாவது:–*
*மாநில அரசுகள் பெற்ற கடன்*
*கேள்வி:– ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது பேசிய எதிர்க்கட்சி தலைவர் தற்போது தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த கடன் சுமை 90 ஆயிரம் கோடி ரூபாய் என்றும், தமிழ்நாட்டில் ஒவ்வொரு குழந்தை பிறக்கும் போதும் தலா 15 ஆயிரம் ரூபாய் கடனுடன் பிறக்கிறது என்றும் சொல்லியிருக்கிறாரே, தமிழக அரசு மட்டும்தான் இந்த அளவிற்கு கடன் பெற்றிருக்கிறதா? மற்ற மாநில அரசுகள் எந்த கடனும் பெற்றது கிடையாதா?.*
*பதில்:– தற்போது எந்த அரசாக இருந்தாலும் கடன் வாங்காமல் திறம்பட ஆட்சி நடத்த முடியாது. மக்களுக்கு தேவையான, அவசியமான திட்டங்களை அதிகத்தொகை செலவழித்து நிறைவேற்ற வேண்டுமென்று திட்டமிடும்போது, கடன் வாங்காமல் அவற்றை எந்த அரசினாலும் நிறைவேற்ற முடியாது.*
*தனிநபர் கடன் சுமை*
*எதிர்க்கட்சி தலைவர் ஜெயலலிதா பேரவையிலே பேசும்போது தமிழக அரசின் மொத்த கடன் சுமை 90 ஆயிரம் கோடி என்றும், தனி நபர் கடன் 15 ஆயிரம்*

ரூபாய் என்றும் சொன்ன புள்ளி விவரம் சரியல்ல. உத்தேசமான ஒரு புள்ளி விவரத்தைத்தான் தெரிவித்தார். இன்றைய நிலையில் தமிழக அரசுக்கு உள்ள மொத்த கடன் சுமை 74 ஆயிரத்து 858 கோடி ரூபாய். வேறு சில மாநிலங்களின் கடன் சுமையை தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், ஆந்திரா மாநிலத்தில் மொத்த கடன் சுமை 92 ஆயிரத்து 465 கோடி ரூபாய். மகாராஷ்டிர மாநிலத்தின் மொத்த கடன் சுமை 1 லட்சத்து 61 ஆயிரத்து 276 கோடி ரூபாய்.
தனி நபர் கடன் சுமை என்று எடுத்துக்கொண்டால் கூட தமிழகத்தில் 12 ஆயிரத்து 54 ரூபாய். ஆந்திராவில் 12 ஆயிரத்து 215 ரூபாய். மகாராஷ்டிரத்தில் 16 ஆயிரத்து 661 ரூபாய். கர்நாடகாவில் 13 ஆயிரத்து 375 ரூபாய். பக்கத்திலே உள்ள சிறிய மாநிலமான கேரளாவிலே கூட 20 ஆயிரத்து 293 ரூபாய். அ.தி.மு.க. ஆட்சிக்காலத்திலே கூட தனி நபர் கடன்சுமை 9,267 ரூபாய் என்ற அளவிற்கு இருந்ததுதான் தற்போது 12 ஆயிரத்து 54 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. எனவே அவரது ஆட்சி காலத்தில் தனி நபர் கடன் சுமையே கிடையாது என்றோ, இப்போது தான் தனி நபர் கடன் சுமை தமிழகத்திலே ஏற்பட்டுவிட்டது என்றோ நினைக்கத் தேவையில்லை.
நிதி பிரச்சினை
இவற்றையெல்லாம் விட மத்திய அரசின் இன்றைய கடன் சுமை 31 லட்சத்து 35 ஆயிரத்து 375 கோடி ரூபாய். மத்திய அரசின் தனி நபர் கடன் சுமை 30 ஆயிரத்து 528 ரூபாய். எனவே தமிழக அரசு நிதி பிரச்சினையில் எந்தவிதமான குழப்பத்திலும் இல்லை என்பதை புரிந்து கொள்ளலாம்.
தமிழக அரசின் இன்றைய கடன் சுமையான 74 ஆயிரத்து 858 கோடி ரூபாய் என்பது கூட ஏதோ கடந்த நான்கு ஆண்டு கால தி.மு.க ஆட்சியில் வாங்கியது என்று நினைத்துக்கொள்ள தேவையில்லை. நான் முன்பே ஒரு முறை குறிப்பிட்டதைப்போல 1996–2001–ம் ஆண்டுகால தி.மு.க. ஆட்சியின் இறுதியில் அதாவது 31–3–2001 அன்று ரூபாய் 28,685 கோடி அளவில் தமிழக அரசின் கடன் பொறுப்புகள் இருந்தன. இதன்பின் அ.தி.மு.க. ஆட்சி நடத்திய 2001–2006–ம் ஆண்டு காலத்தின் இறுதியில் அதாவது 31–3–2006 அன்று மாநில அரசின் கடன் பொறுப்புகள் ரூபாய் 57,457 கோடியாக உயர்ந்தது.
கூட்டு குடிநீர் திட்டம்
சுருங்கக்கூறின் அ.தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டுகால இறுதியில் தமிழக அரசின் கடன் பொறுப்புகள் தி.மு.க ஆட்சி விட்டு சென்றதைவிட இரு மடங்காக உயர்ந்தது புலப்படும். 31–3–2006 அன்று அ.தி.மு.க. ஆட்சியின் இறுதியில் இருந்த ரூபாய் 57,457 கோடி கடன் பொறுப்புகள் 31–3–2009 அன்று மாநில அரசின் மொத்த கடன் பொறுப்புகள் ரூபாய் 74,858 கோடியாக உயர்ந்துள்ளது. அரசு கடனாக திரட்டும் நிதி ஆதாரங்கள் யாவும் அரசின் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கும் கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது.
உதாரணமாக ராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டம் போன்றவைகளை பல லட்சம் மக்களின் அடிப்படை தேவைக்காக நிறைவேற்ற வேண்டுமென்றால் கடன் பெறாமல் நிறைவேற்ற முடியாது என்பதை பொருளாதாரம் தெரிந்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள்.
தி.மு.க. உதவி
கேள்வி:– சேலம் மாவட்டத்தில் அ.தி.மு.க.வினர் சிலர் தி.மு.க.விற்கு வாக்களித்ததற்காக ஜெயலலிதா நடவடிக்கை எடுத்திருப்பதாக சில ஏடுகளில் ஒரு செய்தி வந்துள்ளது, உண்மை தானா?.
பதில்:– சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக பா.ம.க.வை சேர்ந்த ஒருவர் இருந்து வருகிறார். அந்த ஊராட்சி ஒன்றியத்தின் மொத்த உறுப்பினர்கள் 19 பேர்களாகும். அவர்களில் தி.மு.க.வை சேர்ந்தவர்கள் 10 பேர், காங்கிரசை சேர்ந்தவர்கள் 3 பேர், அ.தி.மு.க.வை சேர்ந்தவர்கள் 4 பேர்., பா.ம.க.வை சேர்ந்தவர்கள் 2 பேர்.
ஊராட்சி ஒன்றிய தேர்தலின்போது, தி.மு.க.வும், பா.ம.க.வும் தோழமை

*கட்சிகளாக இருந்த காரணத்தினால் 10 பேர் தி.மு.க.வை சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், 2 பேரை மட்டுமே கொண்ட பா.ம.க.வை சேர்ந்த ஒருவரை ஊராட்சி ஒன்றிய தலைவராக வெற்றிபெற செய்ய தி.மு.க. உதவியது.*

*நம்பிக்கையில்லா தீர்மானம்*

*ஆனால் நாளடைவில் பா.ம.க.வை சேர்ந்த ஊராட்சி ஒன்றிய தலைவர் பல தவறுகள் செய்ததின் பேரில், கடந்த 12–12–2009 அன்று தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள், பா.ம.க.வை சேர்ந்த ஊராட்சி ஒன்றிய தலைவர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் ஒன்றை கொண்டுவரக்கோரி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் மனு கொடுத்தனர். அதன் அடிப்படையில் 22–1–2010 அன்று அயோத்தியாப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றது.*

*தற்போதுள்ள சட்ட விதிப்படி ஒன்றிய தலைவர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென்றால் மொத்த உறுப்பினர்களில் 80 சதவீதம் பேர் அதாவது குறைந்தபட்சம் 16 உறுப்பினர்களாவது நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தால் தான் அந்த தீர்மானத்தை நிறைவேற்ற முடியும்.*

*கட்சி கட்டுப்பாட்டை மீறி*

*அந்த ஊராட்சி ஒன்றியத்தில் தி.மு.க., காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த 13 உறுப்பினர்கள் மட்டுமே நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தால் தீர்மானம் வெற்றி பெற்றிருக்காது. இந்த சூழ்நிலையில் அ.தி.மு.க.வின் தலைமை இரண்டு உறுப்பினர்களை கொண்ட பா.ம.க.விற்கு ஆதரவாக, அ.தி.மு.க.வின் நான்கு உறுப்பினர்களும் வாக்களித்தால் தி.மு.க.வும், காங்கிரசும் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை தோற்கடித்து விடலாம் என்று கருதி, அந்த கட்சியின் முன்னணி தலைவர் ஒருவர் மூலமாக முயற்சித்து, நான்கு அ.தி.மு.க. உறுப்பினர்களையும் பா.ம.க.விற்கு ஆதரவாக தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டுமென்று சொல்லியனுப்பி தீவிரமாக ஈடுபட்டனர். அவர்கள் அவ்வாறு தீவிரமாக ஈடுபட்ட போதிலும், அந்த ஊராட்சி ஒன்றியத்தில் இருந்த நான்கு அ.தி.மு.க. உறுப்பினர்களில் மூன்று பேர், தி.மு.க மற்றும் காங்கிரஸ் கட்சிகளோடு இணைந்து நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவாக–பா.ம.க.வை சேர்ந்த ஊராட்சி ஒன்றிய தலைவருக்கு எதிராக வாக்களித்து தீர்மானத்தை வெற்றி பெற செய்திருக்கிறார்கள்.*

*இவ்வாறு கட்சி கட்டுப்பாட்டை மீறி நடந்த அ.தி.மு.க.வினர் மீது அந்த கட்சியின் தலைமை தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. இதுதான் அயோத்தியாபட்டினம் ஊராட்சி ஒன்றியம் பற்றிய பிரச்சினையாகும்.*

*மதிய உணவு திட்டம்*

*கேள்வி:– தமிழகத்திற்கு வருகை தந்த மத்தியப்பிரதேச முதல்–அமைச்சர் தமிழக அரசின் மதிய உணவு திட்டத்தை தமிழக அரசு சிறப்பாக நடத்தி வருவதாக செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறாரே?.*

*பதில்:– நானும் அந்த செய்தியினை படித்தேன். நாகை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மத்திய பிரதேச மாநில அரசு 9.50 கோடி ரூபாய் செலவில் 340 வீடுகளைக்கட்டி கொடுத்து, அந்த வீடுகளை திறப்பதற்காக மத்தியப்பிரதேச முதலமைச்சர், நண்பர் சிவராஜ்சிங் சவுகான் தமிழகத்திற்கு வந்திருந்தார். அந்த கட்டிடங்களின் திறப்பு விழாவில் என்னையோ, அல்லது தமிழக அமைச்சர்களையோ கலந்து கொள்ள வேண்டுமென்று கடிதமும் எழுதியிருந்தார்.*

*அந்த விழாவில் தமிழகத்தின் சார்பில் மத்திய அமைச்சர் பழனி மாணிக்கத்தையும், மாநில அமைச்சர் மதிவாணனையும் கலந்து கொள்ளுமாறு கூறியிருந்தேன். அந்த விழாவிற்கு வந்த மத்திய பிரதேச முதலமைச்சர் பெருந்தன்மையோடு, தமிழக அரசு இந்தியாவிற்கே முன்னோடியாக மதிய சத்துணவு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதாகவும், இந்த திட்டத்தில் நாளுக்கு நாள் பல புதிய முறைகளை புகுத்தி சிறப்பாக செயல்படுத்தி வருவதாகவும், இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி*

வரும் தமிழக அரசை பாராட்டுகிறேன் என்றும், மத்திய பிரதேசத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தி வருவதாகவும் மனம் திறந்து பாராட்டியிருக்கிறார்.

நன்றி

மேலும் அவர் அந்த பேட்டியில் தமிழ்நாட்டில் மீனவர்களுக்கு மானிய விலையில் டீசல் வழங்குவது பற்றியும், மீனவர்களுக்காக 80 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்துள்ளதை பற்றியும் பாராட்டியிருக்கிறார். இதற்காக நான் தமிழக அரசின் சார்பிலும், என் சார்பிலும் அவருக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

கேள்வி:–பருப்பு விலை சரிந்துள்ளதாக இன்று ஏடுகளில் செய்தி வந்துள்ளதே? விலைவாசி உயர்வை பற்றி வீண் ஆர்ப்பாட்டம் செய்பவர்களால் இந்த செய்தியை தாங்கிக்கொள்ள முடியாதே?.

விலையை குறைக்க...

பதில்:–கடந்த மாத தொடக்கத்தில் 100 கிலோ துவரம் பருப்பு மூட்டை ஒன்று 9 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டதற்கு மாறாக, 23–1–2010 அன்று இதன் விலை 7 ஆயிரமாக குறைந்துள்ளது. மூட்டை ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் விலை சரிந்துள்ளது. இதுபோலவே இரண்டாம் ரக துவரம் பருப்பு விலை மூட்டை 7 ஆயிரம் ரூபாயில் இருந்து 6,500 ரூபாயாக குறைந்துள்ளது. தான்சானியா துவரம் பருப்பு 6,700 ரூபாயில் இருந்து 5,500 ரூபாயாக குறைந்துள்ளது. மியான்மர் துவரம் பருப்பு 6 ஆயிரம் ரூபாயில் இருந்து 5,500 ரூபாயாக விலை குறைந்துள்ளது.

உளுத்தம் பருப்பு விலை மூட்டை ஒன்றுக்கு 7 ஆயிரம் ரூபாயில் இருந்து 6,800 ரூபாயாக விலை குறைந்துள்ளது. முதல் ரக பாசிப்பருப்பு 8 ஆயிரம் ரூபாயில் இருந்து 7,800 ரூபாயாக விலை குறைந்துள்ளது. மொத்த விலை இந்த அளவிற்கு குறைந்தபோதிலும், சில்லரை விற்பனையில் விலை குறையவில்லை என்றும் கூறப்படுகின்றது. மொத்த விலையை தொடர்ந்து சில்லரை விலையையும் குறைக்க உணவுத்துறை; உடனடியாக கவனம் செலுத்திடும்.

இவ்வாறு அறிக்கையில் முதல்–அமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.